# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1767/26 - 2012 ජූලි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.07.19

*1767/26 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் அவசரகால நிதி நியதிச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் 1989, யூலை மாதம் 1 ஆம் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டு ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யு. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2012, யூலை 05.

**ஊவா மாகாணத்தின் 1989 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால நிதியம் நியதிச் சட்டம்**

(1989.07.11 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது)

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டமூலத்தின் 20 (1) ஆம் பிரிவின் கீழ் திடீர் சந்தர்ப்ப நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்காகவும், அத்துடன் தொடர்புடைய இடைநேர் விளையக் கூடிய விடயங்களை ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்.

1. இந்நியதிச் சட்டத்தை 1989 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திடீர் சந்தர்ப்ப சட்ட நிதியமென அறிமுகப்படுத்துவதுடன்

ஊவா மாகாணத் தின் அவசரகால நிதியம்.

2. (1) ஊவா மாகாணத்தின் எதிர்பாராத செலவுகளை ஏற்றுக்கொள்ளும் நோக்கில் (இதற்குப் பிறகு நிதியம் என குறிப்பிடப்படுகின்ற) அவசரகால நிதியமொன்றை உருவாக்கப்படுகின்றது.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அதிகார சபையினால் போக்குவரத்து முற்பணக் கணக்கின் நிதியினை பிரயோகப் படுத்தல் இயலும்.

(2) ரூபாய் பத்து இலட்சத்து (2) நிதியை மாகாண சபை நிதியத்திலிருந்து இந்நிதியத்தில் வைப்பிலிடவேண்டியதோடு அந் நிதியானது நிதியத்தின் ஒரு பகுதியாக வேண்டும்.

(3) மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட நியதிச் சட்டங்கள் மூலம் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற அனைத்து நிதியையும் வைப்பீடு செய்தல் வேண்டும்.

முற்பண நிதி வழங்குதல்.

3. நிதியத்திலிருந்து முற்பணம் செலுத்தும் போது 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டமூலத்தில் 20 (2) உப பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

பொறுப்பேற்றல்.

4. ஆளுநர் அவர்களுடைய பொறுப்பில் இந்நிதியம் இயங்கவேண்டியதோடு, அதன் மூலமான அனைத்து மேலதிக செலுத்தல்களும் அவரின் கரங்களால் இடம்பெற வேண்டும்.

8- 122/1

---

**ஊவா மாகாண மாகாண சபை**

1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் மாகாண சபையின்
(சம்பளம் மற்றும் கொடுப்பனவும்) நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 1990, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டு ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.
2012, யூன் 5.

1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண மாகாண சபைகள் (சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை
செலுத்துவதற்கான) நியதிச் சட்டம்

ஊவா மாகாணத்தின் மாகாண மாகாண சபையின் தவிசாளர் அவர்களுக்கும் பிரதி தவிசாளர் அவர்களுக்கும் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர் மற்றும் நடைமுறைக்குவரும் திகதி.

1. இந்நியதிச் சட்டத்தை 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான) நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன், மாகாண ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் அமுலில் இருத்தல் வேண்டும்.

தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் அவர்களுக்கு செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்.

2. இந்நியதிச் சட்டத்தை அனுமதித்த நாள் முதல், அதற்குப் பின்பு செலுத்தவேண்டிய மாதச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் :-

(அ) மாகாண சபை அமைச்சர் ஒருவருக்கு தற்பொழுது செலுத்தப்படும். மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய அனைத்து கொடுப்பனவுகளுக்கும் நிகராக அனைத்து கொடுப்பனவுகளையும் மாகாண சபை தவிசாளருக்கும் ;

(ஆ) மாகாண சபையின் பிரதி தவிசாளருக்கு மத்திய அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் ஒருவருக்கு தற்பொழுது செலுத்தப்படுகின்ற மாதச் சம்பளம் மற்றும் ஏனைய அனைத்து கொடுப்பனவுகளில் நூற்றுக்கு ஐம்பதிற்கு நிகரான மாதச் சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பவற்றை செலுத்தப்படும்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ஒரு மாகாணத்தின் மாகாண சபை நிதியத்திற்கு சுமையாகும் செலவாக வேண்டும் என்பது.

3. மாகாண சபையின் தலைவருக்கும் பிரதி தலைவருக்கும் சட்டத்தின் கீழ் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன அம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு அமையாதல் வேண்டும் என்பது.

8- 122/2

**ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாண மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் பிரதான அமைச்சரின் நிதி நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 1993, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டு ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.
2012, யூன் 5.

**வறுமை நிவாரணத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் கல்வியை அல்லது அறிவை முன்னேறுவதற்காகவும், சமயத்தை முன்னேற்றுவதற்காகவும், மாகாணத்துக்குச் சேவையாற்றியுள்ள ஆட்களுக்குப் பரிசில்களை வழங்குவதற்காகவும், மாகாணத்திலுள்ள பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் அல்லது அக்கறையுள்ள வேறு நோக்கங்களுக்காகவும் "பிரதான அமைச்சரின் நிதியம்" என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச் சட்டம்**

மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகும் :-

1. இந்நியதிச் சட்டம் 1992 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்க, பிரதான அமைச்சரின் நியதிச் சட்டம் என எழுத்துக் காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்திதன் பின்னர் ''நிதியம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''முதலமைச்சரின் நிதியம்'' என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியமானது, அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர் கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும். என்பதுடன் இடையறாத செயற்பாடும் கொண்டிருக்கும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும். அப்பெயரில் அது வழக்கும் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

3. (1) நிதியத்தின் நிர்வாகம் முகாமை மற்றும் மூலதனம் என்பன இதனகத்தின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அமைக்கப்பட ஆளுநர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) (இதனகத்தின் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியத்தின் ஆளுநர் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மாகாணத்தின் முதலமைச்சர் ;

(ஆ) மாகாண ஆளுநர் நியமத்தர் ஒருவர் ;

(இ) எதிர்த்தரப்பினரால் பெயர்குறித்த நியமிக்கப்பட்ட அல்லது எதிர்தரப்பினை பிரதிநிதித்துவம் செய்யும், பிரதான அமைச்சருக்கு நியமிக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ;

(ஈ) மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு மாகாணத்தின் பிரதான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏனைய இருவர்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் பிரதான அமைச்சர் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவரால் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் நியமனத்தை நீக்கஞ் செய்யலாம்.

(4) சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவலைக் கொண்டு நடாத்துதல் தொடர்பான நடைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(5) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஒரு வெற்றிடம் இருக்கின்றது என்ற அல்லது அதன் உறுப்பினரின் நியமனத்திலுள்ள ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினால் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலும் ஆகாது.

(6) பிரதான அமைச்சர் சபையின் தலைவராதல் வேண்டும்.

4. சபையானது, நிதியத்தின் நிருவாகத்துக்காகவும், நிதியத்தின் பெயரிலும் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்றை ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது முகாமை செய்தல் ;

(ஆ) நிதியமானது உரித்துடையதாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆனத்தை விற்றல், ஈடுவைத்தல் கொடுத்து மாற்றுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் அல்லது கையாழுதல் ;

(இ) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடங்களையும் நிறைவேற்றுதல்.

5. மானியங்கள், நன்கொடைகள் அல்லது கொடைகள் என்ற வகையில் நிதியம் பெறக்கூடிய எல்லாப் பயன்களும் நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

6. சபையானது, கீர்த்திபெற்ற வங்கியொன்றில், ''பிரதான அமைச்சரின் நிதியக் கணக்கு'' என அழைக்கப்படும் கணக்கொன்றைப் பேணிவருதல் வேண்டும். அத்துடன் அத்தகயை கணக்கிற்குள் இந்நியதிச் சட்டம் ஆரம்பமாகும் திகதிக்குப் பின்னர் நிதியத்துக்கு வந்து சேரக்கூடிய எல்லாப் பணங்களும் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

7. சபையானது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நிதியத்துக்குச் சொந்தமான பணங்களை பின்வருவனவற்றிற்குப் பிரயோகிப்பது சபையின் கடமையாதல் வேண்டும் :-

(அ) வறுமை நிவாரணம் ;

(ஆ) கல்வியின் அல்லது அறிவின் முன்னேற்றம் ;

(இ) சமயத்தை முன்னேற்றுதல் அல்லது சமயச் சடங்குகளையும் பழக்கங்களையும் பேணுதல்.

8. நிதியத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்கள் சபை தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் சபையில் முதலீடு செய்யப்படலாம்.

9. சபையானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதால் வேண்டும் :-

(அ) நிதியத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்கும் முகாமை செய்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் நியமித்தல் ;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கொடுபடற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல் ;

(இ) நிதியத்தின் வருமானத்திலிருந்து அத்தகைய ஊதியத்தையும் அலுவல்களை நிருவகிப்பதில் கூறப்படும் வேறு செலவுகளையும் செலுத்துதல்.

10. (1) சபையானது நிதியத்தின் வரவு, செலவு, சொத்துக்கள் பொறுப்புக்கள் அத்துடன் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்குச் செய்தல் வேண்டும் என்பதுடன் வருடாந்த கணக்குகள் தாபிக்கப்படச் செய்கின்றதாலும் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமை அதிபர் ஒவ்வோராண்டும் நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வித்தல் வேண்டும். அத்தகைய கணக்குகளில் கணக்காய்வில் அவருக்கு உதவியளிக்கும் நோக்கத்துக்காக கணக்காய்தல் தலமையதிபதி எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தலாம் ; இவர்கள் அவரது பணிப்பின் கீழும்/வழிகாட்டலிலும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்றுதல் வேண்டும். கணக்காய்வின் பெறுபேறுகளைக் கொண்டுள்ள தமது அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையமைய மாகாண சபையில் முன்வைக்க வேண்டும்.

(3) நிதியத்தின் அத்தகைய கணக்குகளில் கணக்குகளின் கணக்காய்வில் அவரால் கூறப்பட்ட செலவுகளைச் சமாளிக்கும் நோக்கத்துக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய ஊதியத்தை நிதியத்தின் வருமானத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிதியத்திலிருந்து பெறப்படும் ஏதேனும் ஊதியம். அத்தகைய கணக்காய்வின் நோக்கங்களுக்காக அவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு அவரால் கொடுக்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அதிலிருந்து கழித்த பின்னர், திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது.

(அ) இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் கணக்காளர் ஒருவராக இருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்வரான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) வதியும் பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருக்கும் பட்டயக் கணக்காளர் குழுவொன்று என்று- பொருள்படும்.

11. இந்நியதிச் சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அத்துடன் புரிதல் என்பவற்றைப் பாதிக்கும் அல்லது என்பவற்றோடு தொடர்புபட்ட அல்லது என்பவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் கருமத்தொடர்பில் அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

8- 122/3

---

ஊவா மாகாண மாகாண சபை

**2000 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின்**
**நூலக சேவைகள் நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2003, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டு ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.
2012, யூன் 5.

3 - PG 001373

ஊவா மாகாண மாகாண சபை

## 2000 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் நூல் நிலைய சேவைகள் சபை பற்றிய நியதிச் சட்டம்

சுருக்கப் பெயர்.

1. இந்நியதிச் சட்டமானது ஊவா மாகாண மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஊவா மாகாண நூல் நிலைய சேவைகள் சபை பற்றிய நியதிச் சட்டம் எனக் காட்டப்படும்.

அறிமுகம்.

2. ஊவா மாகாண நூல் நிலைய சேவைகள் முறையாக மேற்கொள்ளவும், அதன் மூலம் வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், ஊவா மாகாணத்தில் உள்ள நூல் நிலையங்களின் அபிவிருத்திக்கும், கல்வி நடவடிக்கைகளுக்கும் தேவையான அறிவு விளக்கம், தரவுகள், தகவல்கள் என்பவற்றினை காலத்திற்கேற்பவும் முறையாகவும் வழங்குவதற்காகவும் அதற்கேற்ப தேவைப்படுகின்ற சேவைகள் கருவிகள் கட்டிடங்கள், புத்தகங்கள் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் கருமங்களையும் மேற்கொள்ளவதற்கு உரியதான நடவடிக்கைகளை முறையாகவும் ஒரே சீராகவும் மேற்கொண்டு செல்வதற்காகவும், நூல் நிலைய சேவைகளில் அமர்த்தப்படுவதற்கான சேவைக் குழாத்தினை உள்ளீர்தல் சேவைப் பொறுப்புக்கள் ஒழுங்காற்று நிர்வாகம் தொடர்பான விடயங்கள் பற்றிய நியதிகள் விதிமுறைகள் வகுப்பதற்காகவும் சேவையாளர்களுக்குத் தேவைப்படுவதான தொழில் நுட்பங்கள் பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதற்காகவும் மேற்குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் இடைநேர் விளைவான பொருத்தமான நிர்வாக அமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்குமான நியதிச் சட்டமொன்றாகும்.

நோக்கங்கள் .

3. (அ) நூல் நிலையங்களையும்/ தகவல் நிலையங்களையும் நடாத்திச் செல்வதும் அபிவிருத்தி செய்வதும் ;

(ஆ) புத்தகங்களையும் ஏடுகளையும் பாதுகாத்தல் ;

(இ) புத்தகங்கள் சேவையினை ஏற்பாடு செய்தலும் மாகாணத்தில் நூற் கலை நூற்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டும் எழுத்தாளர்களின் நூற்களை வெளியிடல் தொடர்பாக உதவிகளை செய்தல் ;

(ஈ) வாசித்தலுக்கான உபகரணங்களை இலகுவாக பெற்றுக்கொள்ள வழியமைத்தலும், கண்காட்சிகள், கருத்தரங்குகள், கருத்திட்டங்களை என்பவற்றை நடைமுறைப்படுத்துதல் ;

(உ) கல்வி, விளக்கமளித்தல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல் ;

(ஊ) தலைமை நூலகர் நூல் நிலைய பணிகளுக்கான ஏனைய ஊழியர்கள் ஆகியோரை பதவியில் உள்வாங்கி பதவி உயர்வுகளை வழங்குதல் ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்கான விதிமுறைகளை வகுத்தல் விசாரணைகளை மேற்கொள்ளுதல் ;

(எ) நூல் நிலைய அபிவிருத்திக்கான நிதியமொன்றினை ஏற்படுத்துதலும் அதன் நடவடிக்கைகளை மேகொள்ளுதலும் ;

(ஏ) மாகாணத்தினுள் (தனிப்பட்ட தல்லாத) அனைத்து நூல் நிலையங்களுக்குமான முறையாக மேற்கொள்வதற்குத் தேவைப்படுவதான ஒன்றிணைப்பு நடவடிக்கைகளுக்கான விதிமுறைகளை விதித்தல் ;

(ஐ) நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணங்கள் பொருட்களை வழங்குதலும் அதற்குத் தேவையான முறையான திட்டங்களை தயாரித்தலும் விதித்தலும் ;

(ஒ) தேசிய சர்வதேச அறிவினையும் தகவல் தொழில் நுட்பத்தின் நவீன போக்குகளுடன் இணைந்து ஊவா மாகாணத்தினுள் தகவல் தொழில்நுட்பங்களையும், அறிவிணையும் மேம்படுத்தல் ;

(ஓ) அடிப்படையான நோக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் இயைபான கருமங்களை மேற்கொண்டு செல்வதற்கு தேவைப்படுவதான ஏனைய பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக தேவைப்படுவதான துணைச் சட்டங்களையும், வீதிகளையும், கட்டளைகளையும் தயாரித்தல்.

இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக இங்கு பின்னர் குறிப்பிடப்படுகின்ற விதிமுறைகளுக்கு ஏற்புடையதாக:- அமைப்பு.

(1) மாகாண நூலக சேவைகள் சபையொன்றினையும், நிரந்தர ஊழியர் கோப்பொறினையும் கொண்டதன்நிர்வாக அலகொன்றும் .

(2) மொனராகலை, பதுளை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்குமென இரண்டு மாவட்ட மத்திய நூல் நிலையங்கள் இரண்டினையும்

(3) மாகாண நூல் நிலைய சேவை சபையுடன் இணைந்ததான மாகாண மத்திய நூல் நிலையமொன்றினையும்

பாகம் I

**ஊவா நூல் நிலைய சேவை மதியுரை சபையொன்றினை நிறுவுதல்**

5. (அ) ஊவா மாகாண நூல் நிலைய சேவைகள் சபைக்குத் தேவையான மதியுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காகவென கீழ்க் குறிப்பிடப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்ட மதியுரை சபையொன்று நிறுவப்படும் ; மாகாண நூல் நிலைய சேவை மதியுரை சபை.

(ஆ) மாகாண நூல் நிலைய சேவைகள் சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நூல் நிலைய சேவை மதியுரை சபையிடம் விசாரித்து ஒருப்பாட்டுடன் செயற்படுத்துதல் வேண்டும் ;

1. ஊவா மாகாண சபையின் முதலமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற மாகாண சபையின் இரண்டு உறுப்பினர்கள் ;

2. ஊவா மாகாண சபையின் எதிர்கட்சித் தவிசாளரினால் நியமனம் செய்யப்படுகின்ற மாகாண சபையின் இரண்டு உறுப்பினர்கள் ;

3. ஊவா மாகாண சபையின் தலைமைச் செயலாளர்.

(இ) ஊவா மாகாண மாகாணசபையின் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற மேற்குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களில் ஒருவர் மதியுரை சபையின் தவிசாளராக இருப்பதுடன் ஊவா மாகாண சபையின் பிரதி (திட்டமிடல்) தலைமைச் செயலாளர் உத்தியோகத்தோரனையில் சபையின் செயலாளருமாவார். செயலாளர் மதியுரை சபையின் உறுப்பினரொருவராக மாட்டார்.

6. ஊவா நூல் நிலைய சேவைகள் சபையினையும் துணை சபையினையும் நிறுவுதல் மாகாண நூல் நிலைய சேவைகள் சபை.

(அ) ஊவா மாகாணத்தின் நூல் நிலைய சேவையின் தரவு தகவல் சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளின் திட்டமிடல், அபிவிருத்தி, தொடர்பாடல் என்பனவும் மாகாணத்தின் உள் அனைத்து நூல் நிலைய சேவை நடவடிக்கைகளுக் உரிய நிர்வாக ஒரே தன்மையொன்றினை மேற்கொள்வதும், மாகாண நூல் நிலைய சேவைகள் சபையின் கீழ் நிறுவப்படுகின்ற சபைகள் துணை சபைகள் அலகுகள் என்பனவற்றினதும் ஏனை நிறுவனங்களின் நிர்வாகத்தினை மேற்கொண்டு செல்வதற்காகவும் ஊவா மாகாண நூல்நிலைய சபை எனும் பெயரில் நிறுவனமொன்றினை நிறுவுவதுடன் அது இதன் பின் இந் நியதிச் சட்டத்தின் விதி முறைகளுக்காகவென சபை எனும் சுருக்கப்பெயரில் குறிப்பிடப்படும்.

1. அச்சபையானது –

ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற தவிசாளரொருவரையும் கீழ் குறிப்பிடப்படுகின்ற உறுப்பினர்களையும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(அ) கல்வி விடய அமைச்சின் செயலாளர் ;

(ஆ) உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ;

(இ) உள்ளூராட்சி ஆணையாளர் ;

(ஈ) மாகாண கல்வி பணிப்பாளர் ;

(உ) இலங்கை தேசிய நூல்நிலைய சேவைகள் சபையினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதி நிதியொருவர் ;

(ஊ) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற மாகாணத்தின் நூல் நிலைய நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற விற்பன்னர்கள் இருவர் ;

(எ) தலைமைச் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நிதி முகாமைத்துவம் தொடர்பான அறிவுள்ள ஒருவர்.

11. மாகாண நூல் நிலைய சேவைகள் சபையின் பணிப்பாளர் அச்சபையின் செயலாளராகவும் செயற்பட வேண்டுமென்பதுடன், அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக முடியாது. சபையின் அனைத்து கடிதங்கள், பதிவேடுகள் அறிக்கைகள் என்பவற்றுடன் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகவும் செயற்படுதல் வேண்டும்.

*மாகாண நூல் நிலைய சபையின் பணிப்பாளரையும் பிற உத்தியோகத்தர்களையும் நியமித்தல்.*

7. 1 இந்நியதிச் சட்டத்தின் கீழ் சாட்டப்படுகின்ற பொறுப்புகளையும் கருமங்களையும் முறையாக நிறைவேற்றுவதற்காக மாகாண நூல்நிலைய சேவைகள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தகைமைகளையும், உள்ளீர்தல் விதிமுறைகளுக்கமைய நூலக விஞ்ஞானம், விஞ்ஞாபனமும், எழுத்துத் துறை விஞ்ஞானம் தொடர்பான தொழிற்தகைமைகள் கொண்டவர்களும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகமொன்றின் பட்டம் பெற்றவரும் மாகாண நூல் நிலைய சபையின் பணிப்பாளராக நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

2. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் சாட்டப்படுகின்ற பொறுப்புக்களையும், கருமங்களையும் ஆற்றுவதற்காகவென காலத்திற்கு காலம் தேவைப்படுகின்ற உத்தியோகத்தரகளையும் ஊழியர் கோப்பினையும் மாகாண நூல் நிலைய சேவைகள் சபையினால் உள்ளீர்க்கவும் தீர்மானமெடுக்கவும். இயலும்.

3. இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உப பிரிவுகளின் கீழ் உள்ளீர்க்கப்படுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களும் குற்றவியல் சட்ட தொகுப்பின் கருத்துக் கோடலுக்கமைய அரசாங்க உத்தியோகத்தர்களாக கருதப்படுதல் வேண்டும்.

4. இந்நியதிச் சட்டத்தின் கீழ் செயல்படும் யாரேனும் ஒரு அரச அலுவலரினால் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படும் அல்லது நடைமுறைப்படுத்தப்படாத ஏதேனும் வியடம் சம்பந்தமாக அவருக்கு எதிராக எவ்வித வழக்கினையும் தாக்கல் செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

5. இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளரினால் தனது அதிகாரத்தினை அமுல்படுத்தும் சந்தர்ப்பத்தில் மற்றும் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் சந்தர்ப்பத்தில் மாகாண நூல் நிலைய சேவைகள் குழுவினால் வழங்கப்படும் பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அல்லது முடிவுகளுக்கு இணங்க செயல்படுதல் வேண்டும்.

6. இப்பிரிவின்படி நியமிக்கப்படுகின்ற ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் மேற்படி (5) ஆம் பிரிவிற்கு இசைவாக பணிப்பாளரினால் விடுக்கப்படும் பொது அல்லது விசேடமான பணிப்புகளின் கீழ் தமது பொறுப்புக்களையும் அலுவல்களையும் ஆற்றுதல் வேண்டும்.

7. பணிப்பாளர் உட்பட அனைத்து ஊழியர் குழுவிற்குமாக குறிப்பிட்ட பதவிக் கமர்த்தும் விதிமுறைகளும் சேவை நிபந்தனைகளும் நியதிச் சட்டத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால் அமைச்சர் அவர்களின் அவதானத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படும்.

*8.* (1) சபையின் பொறுப்பும் அலுவல்களும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கும் இந்நியதிச் சட்டத்தின் விதிகளுக்கு கீழ் அமைச்சரினால் பணிப்புகளை பிறப்பிக்கலாம். *சபையின் பொறுப்புகளும் அலுவலகம் தொடர்பான பணிப்புகளும் விதிகளும்.*

(2) சபைக் கூட்டங்களின் விதிமுறைகளையும் அக்கூட்ட நடவடிக்கைகளையும் முறையானதாவதற்காகவும் செயற்குழு கொடுப்பனவு கூட்டங்களுக்கான கொடுப்பனவு என்பனவற்றை கொடுப்பனவு செய்வது தொடர்பாக சபையினால் விதிகளை வரைவு செய்யலாம்.

*9.* (1) ஊவா மாகாணத்தின் அந்தந்த மாவட்டத்தினுள் நூலக சேவையினையும் தகவல் சுவையினையும் முறைமைப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் முன்னேற்றவும் அந்நடவடிக்கைகளை நிர்வகிக்கவும் சம்பந்தப்படுவதான நடவடிக்கைகள் பற்றி மாகாண நூலக சேவை சபையின் ஆலோசனைகளுக்கும் சிபாரிசுகளுக்கும் அமைவாக செயற்படுவதற்காகவும் அவ்விடயங்கள் தொடர்பாக மாகாண நூலக சேவை சபைக்கும் தேவையான போது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வதற்காகவும் மாவட்ட மத்திய நூலகங்களை அமைத்தல் முடியும். *மாவட்ட மத்திய நூலக உப குழுக்களை அமைத்தல்.*

(2) இந்த மாவட்ட மத்திய நூலக உப சபையானது இங்கு இதன் பின்னர் உப சபை என குறிக்கப்படுவதுடன் அச்சபையானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு அமைத்திருத்தல் வேண்டும்.

(i) குறிப்பிட்ட மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர் ;

(ii) குறிப்பிட்ட மாவட்டத்தின் பிரதேச நூல் நிலைய சேவைகள் உப குழுவின் தவிசாளர்கள் ;

(iii) மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ;

(iv) மாகாண நூலக சேவைகள் சபையினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதியொருவர் ;

(v) மாகாண கல்வி பணிப்பாளரினால் குறிப்பிட்ட மாவட்டத்திற்கென பெயரிடப்படும் பிரதிநிதியொருவர் ;

(vi) குறிப்பிட்ட மாவட்டத்தின் நூல் நிலையங்களை மேற்பார்வை நடவடிக்கையை ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி ஆணையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் உள்ளூராட்சி ஆணையாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற பிரதிநிதியொருவர்.

(vii) விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற வாசகர் சேவைக்குரிய தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞாபனம் நவீன அறிவு பற்றிய விரிவான அறிவும் விளக்கமும் கொண்ட குறித்த மாவட்டத்தினை சேர்ந்த இரண்டு விற்பனைகள் ;

(viii) மாவட்ட கலாசார உத்தியோகத்தர்.

*3.* மேற்படி சபையின் உத்தியோகத்தர்களில் ஒருவர் அங்கத்தினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் தலைவராக தெரிவு செய்யப்படுவதுடன் அவர் உத்தியோக ரீதியில் மாவட்ட மத்திய நூலகத்தின் தலைமை நூலகச் செயலாளராகவும் செயற்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் சபையின் உறுப்பினராகுவார்கள்.

*10.* (1) ஊவா மாகாணத்தில் அந்தந்த பிரதேச செயலாளர்களின் பிரிவுகளின் நூலக சேவைகளையும் தகவல் சேவைகளையும் முறையாக மேற்கொள்ளவும் அபிவிருத்தி செய்யவும் மேம்படுத்தவும் அந்நடவடிக்கைகள் நிர்வகிக்கவும் உரிய விடயங்கள் தொடர்பாக மாகாண நூலக சேவைகள் சபையின் ஆலோசனைகள் சிபாரிசுகளுக்கமைய செயற்படுத்துவதற்காகவும் அவ்விடயங்கள் தொடர்பாக மாகாண நூலக சேவைகள் சபைக்கு தேவைப்படும் போது தகவல்களையும் அவதானங்களையும் பெற்றுக்கொள்வதற்காகவும் மாவட்ட மத்திய நூலக உப சபையுடன் தொடர்புடையதாக பிரதேச மத்திய நூலக உப சபையொன்று அமைக்கப்படுதல் இயலும்.

2. இந்த பிரதேச மத்திய நூலக உப சபையானது இங்கு இதன் பின்னர் பிரதேச உப சபை எனக் காட்டப்படுவதுடன் அச்சபைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களை கொண்டதாயிருத்தல் வேண்டும்.

(i) குறித்த பிரதேச செயலாளரின் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படும் பிரதிநிதி ஒருவர் ;

(ii) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர் ;

(iii) குறித்த பிரதேச செயலாளர் பிரிவிற்கு உரித்தான உரிய கல்வி வலயத்தின் வலய கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர் ;

(iv) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் பிரதிநிதியொருவர்;

(v) பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது கலாசார உத்தியோகத்தர் ;

(vi) பிரதேச செயலாளர் பிரிவின் அரச துறைகளின் அனைத்து நூலகங்களினதும் நூலகர்கள் ;

3. மேற்படி சபை உத்தியோகத்தர்களில் பெரும்பான்மை வாக்குகளினால் தலைவராக தெரிவு செய்யப்படுவதுடன் உத்தியோக ரீதியில் மாவட்ட மத்திய நூலகத்தின் நூல் நிலைய தலைமை நூலகர் செயலாளராகவும் செயற்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் சபையின் உறுப்பினரொருமாவார்.

*உப சபையினர் செயற்பாடுகள்.*

11. உப சபையும் மத்திய நூலகமும் ஊவா மாகாண நூலக சேவை சபையின் ஆலோசனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாக கருமமாற்றுதல் வேண்டும்.

*உப சபைக்கான விதிமுறைகள்.*

12. உபசபையின் செயற்பாடுகள், கூட்டங்களுக்கான நடைமுறை விதிகள் குழுக்களுக்கான கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் தொடர்பான விதிமுறைகளை மாகாண நூலக சேவை சபையினால் விதிக்கப்படும்.

*சபை உப சபைக் கென நியமிக்கப் படும் உறுப்பினர் களின் பதவிக் காலம்.*

13. (1) விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் சபைக்கென நியமிக்கப்படும் உறுப்பினர்களதும், சபையினால் உப சபைக்கென நியமிக்கப்படும் உறுப்பினர்களினதும் பதவிக்காலமானது உறுப்பினர் எவரும் இறத்தல், பதவி விலகுதல் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் முறைப்படி முதலமைச்சரினால் அல்லது சபையினால் வெளியேற்றப்படுதல் எனும் காரணங்களினால் பதவி வெற்றிடம் ஏற்படும் போதல்லாது இரண்டு வருடங்களுக்குப் அப்பதவி காலம் செல்லுபடியானதாகும்.

(2) சபைக்கு அல்லது உப சபைக்கு என நியமிக்கப்பட்ட எந்த ஒரு உறுப்பினரையும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் அல்லது சபையினால் எச்சந்தர்ப்பத்திலும் காரணம் காட்டாது வெளியேற்றப்பட அதிகாரம் உள்ளது.

(3) உரிய பதவிக் காலம் முடிவடைய முன் உறுப்பினர் ஒருவர் பதவிக் விலகுமிடத்து அவ்விடத்திற்கு நியமிக்கப்படும் ஒருவர் பதவி விலகியவர் வகிக்க வேண்டிய எஞ்சிய காலப்பகுதிக்கு மட்டும் பதவி வகித்தல் முடியும்.

(4) உரிய கால முடிவிற்குப் பின்னர் அல்லது முன்னர் பதவி காலத்தை முடித்துக்கொள்ளும் ஒரு உறுப்பினர், நியதிச் சட்டத்தின்படி தகைமைகளைக் கொண்டிருப்பின் மீண்டும் நியமனம் பெறத் தகுதியுடையவராவார்.

(5) சுகயீனம் காரணமாக அல்லது வெளியூர் சென்றதன் காரணமாக அல்லது வேறு எக்காரணங்களினாலும் உறுப்பினர் ஒருவர் சபையின் அல்லது உப சபையின் கடமைகளைச் செய்ய முடியாதவிடத்து அவரிடத்துக்கு தற்காலிகமாக அவ்வுறுப்பினருக்காக பதிற்கடமை புரிவதற்காக தகைமையுள்ள ஒருவரை நியமிக்கும் தத்துவம் முதலமைச்சருக்கு அல்லது சபைக்கு உண்டு.

*அங்கத்துவத்திற் கான தகைமை யீனங்கள்.*

14. எவரேனுமொருவர் -

(அ) குற்றம் ஒன்றினை இழைத்தமைக்காக மூன்று மாதங்களுக்கு குறையாத காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டதான தண்டனைக்குட்பட்ட அல்லது அவ்வாறான குற்றமொன்றிற்காக 500.00 ரூபாவுக்கு மேற்பட்ட தண்டப் பணத்திற்குட்பட்டிருத்தல் ;

(ஆ) ஒருவர் கடும் முறைக்கேடுகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு சேவையிலிருந்து, நீக்கப்பட்டவராயிருத்தல் ;

(இ) மாகாண சபையின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்கும் ஒருவர் ; சபையின் உறுப்பினராக தகைமையுடையவரல்லர்.

15. ஒருவர் - *அங்கத்துவத்தினை இழத்தல்.*

(1) இறப்பு ;
(2) பதவி விலகுதல் ;
(3) பதவி நீக்கம் ;
(4) நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அங்கத்துவத்தினை பெறுவதற்கான பதவிக்காலம் முடிவுறுதல் ;
(5) குற்றம் ஒன்றை இழைத்தமைக்காக மூன்று மாதங்களுக்குக் குறையாத (ஒத்திவைக்கப்பட்ட அல்லது நடைமுறையிலுள்ளதான) சிறை தண்டனை விதிக்கப்படுதல் ;
(6) அங்கத்தவராயிருக்கையில் பாராளுமன்ற அல்லது மாகாண சபையின் அங்கத்தவராதல்.
(7) காரணம் காட்டப்படாது சபையின் உப சபையின் கூட்டத்தொடர் ஒன்றிற்கு சமுகமளித்திருத்தல் எனும் காரணங்களினால் தம் அங்கத்துவத்தை இழந்தவராவார்.

## பாகம் II

## நூலக நிதியத்தினை ஸ்தாபித்தல்

16. ஊவா மாகாண சபையினால் நூலக நடவடிக்கைகளுக்காக வருடத்தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் அந்நிதியினை சபையின் ஆலோசனைக்கு ஏற்ப உரிய தேவைகளுக்கேற்ப வருடத்தினுள் ஊவா மாகாணத்தினுள் உள்ள நூல் நிலையங்களுக்காக செலவு செய்யலாம். இதற்கு மேலதிகமாக மத்திய அரசாங்கமும் நூலக நடவடிக்கைகளுக்காக விசேட நிதி ஒதுக்கீடுகளை வழங்கலாம். அவ்வாறே வெளிநாட்டு உதவிகளாகவோ, வேறு வகையிலோ நிதியினை பெற்றுக்கொள்ளுதல் கூடும். *நிதி.*

17. ஊவா மாகாணத்தினுள் நூலக சேவை தகவல் தரவுச் சேவை மேம்பாட்டிற்காக அபிவிருத்தி செய்வதற்காக முன்னேற்றுவதற்காக இங்கு இதன் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பிடப்படும் ஊவா மாகாண நூலக நிதியினை அமைக்கலாம். *மாகாண நூலக நிதியம்.*

18. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதி வரும் படிகள் அனைத்தும் நிதியத்திற்கு சேர்க்கப்படுதல் வேண்டும். *நிதியத்திற்குட்படும் நிதியம்.*

(அ) மத்திய அரசினால் அவ்வப்போது ஊவா மாகாண நூலகங்களுக்கென வழங்கும் நிதி ஒதுக்கீடுகள்;

(ஆ) மாகாண சபையினால் வருடந்தோறும் அல்லது விசேட தேவைகளுக்கென ஒதுக்கப்படும் நிதி ;

(இ) வெளியூர்களிலிருந்தோ உள்நாட்டிலிருந்தோ உதவித் தொகையாக நன்கொடையாக அன்பளிப்பாக வழங்கப்படும் நிதி.

19. (1) சபைக்கென அமையும் அல்லது அசையா சொத்துக்கள் எதனையும் உரியவாறு கொள்வனவு செய்யவோ அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளவோ சந்தர்ப்பம் உண்டு. *அசையும் அசையா சொத்துக்களை கொள்வனவு செய்தல் அல்லது அன்பளிப்பு பெறுதலும் விற்றலும்.*

(2) அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அசையும், அசையா சொத்துக்களை குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு அமைவாக விற்பதற்கான அங்கீகாரம் இருப்பதுடன் காணிகள், கட்டிடங்கள் எதனையும் அல்லது பொறிமுறைகள், வாகனங்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்கு அமைச்சர் அவர்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு விற்பனை மூலம் பெறப்படும் நிதி அனைத்தும் நிதியத்தின் வரவில் இடப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் நிர்வாகம்.

20. 1 (1) நிதியமானது அமைச்சரின் நடைமுறைப்படுத்தலுடனும், கண்காணிப்பின் கீழும் சபையினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது நிதி நிர்வாகம் தொடர்பாக அமைச்சருக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன், ஆலோசனை சபையாகவும் செயற்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு பஞ்சாங்க வருடமும் முடிவடைந்தவுடன் கூடிய விரைவில் என்னும் சபையினால் அழைக்கப்பட்டிருந்தாலொழிய மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு நிதியத்தின் நிதி நிர்வாகம் தொடர்பாக அறிக்கை ஒன்றினை பணிப்பாளர் தயாரித்து ஊவா மாகாண தலைமைச் செயலாளருக்கு முன்னளித்தல் வேண்டும் என்பதுடன், அவர் அவரது அவதானங்களுடனும் சிபாரிசுடனும் அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு பஞ்சாங்க வருடம் தொடர்பாகவும் முழுமையாகவும் உகந்த முறையிலும் கணக்கு வைப்புகளை பேணி வருவது பணிப்பாளரது பொறுப்பாகும்.

(5) நிநியத்தின் அனைத்து நிதி நிர்வாகம் தொடர்பாகவும் பொருத்தமான பணிப்புகளை விடுக்கவும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்வதற்கு விதிக்கப்படும் மாகாணத்தின் தலைமை செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

(6) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் விதிமுறைகளை தேவையான மாற்றங்களுடன் நிதியத்தின் நிதி நிர்வாகம் கணக்கு வைப்புக்கள் சம்பந்தமா இருத்தல் வேண்டும்.

(7) நிதியத்தின் நிதி வருடம் பஞ்சாங்க வருடமாக இருத்தல் வேண்டும்.

நிதி பற்றிய வருடாந்த அறிக்கையினை மாகாண சபைக்கு சமர்ப்பித்தல்.

21. அமைச்சர் ஒவ்வொரு நிதி வருடம் தொடர்பாகவும் நிதியத்தின் நிர்வாகம் பற்றிய அறிக்கை ஒன்றினை ஊவா மாகாண சபையில் முன்வைத்தல் வேண்டும். அந்நிதியின் கணக்கு வைப்புக்கள் பற்றிய கணக்கு பரிசோதனையின் கணக்கு பரிசோதனையாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரதியொன்றினையும் அமைச்சரினால் மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

நிதியத்திலிருந்து மேற்கொள்ளப் படும் கொடுப் பனவுகள்.

22. உரியவாறு அமைச்சரின் ஆலோசனைகள் சபையினால் தீர்மானிக்க அங்கீகாரத்திற்கும் நிதித் தொகையின் பெயரில்

(அ) சபையின் ஊழியர்களின் வேதனங்கள், கொடுப்பனவுகள் ;

(ஆ) சபை உறுப்பினர்கள், குழுவின் கொடுப்பனவு,கூட்டத்திற்கான கொடுப்பனவுகள் என்பன;

(இ) சபையினால் நடாத்தப்படும் மத்திய நூல் நிலையங்களுக்கான நிர்வாக செலவுகள் ;

(ஈ) நியதிச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைவாக மேற்கொள்ளத்தக்க அனைத்து செலவுகள் ;

(உ) சபையின் கருமங்களையும், செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சபைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் என்பவற்றிற்காக அனைத்து செலவு செய்ய வேண்டிய அனைத்து செலவு ;

(ஊ) நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்குமைவாக அமைச்சரினால் அல்லது முறைப்படி சபையினால் தீர்மானிக்கப்படும் வேறு அனைத்து கொடுப்பனவுகள் என்பவற்றையும் நிதியத்திலிருந்து செலவு செய்யலாம் ;

(எ) உள்ளூர், வெளியூர் புலமைப் பரிசில்களுக்காக செலவு செய்ய வேண்டிய செலவுகளையும் நிதியத்தில் இருந்து செலவு செய்யலாம்.

பாகம் III

**பொது நூலக சேவை நிலையம், தகவல், தரவு சேவைகள், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல்**

23. அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு கீழ் குறிப்பிடப்படுகின்ற கருமங்கள் இங்கு இதன் பின்னர் பயிற்சியளித்தல் ஆராய்ச்சி நிலையம் என குறிக்கப்படும் பயிற்சியளித்தல் ஆராச்சி அல்லது சேவை நிலையங்கள் ஒன்றினை அல்லது சிலவற்றை நிறுவுதல் கூடும்.

பயிற்சியளித்தல் ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல்.

(அ) நூலக விஞ்ஞானம், தகவல் விஞ்ஞானம், தரவுகள் தகவல்கள் சேவைகள் மதிப்பீடு, ஆற்றல், விளக்கங்கள், ஆலோசனைகள், பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதற்காக நுட்ப நிலையங்களில் பயிலும் மாணவரின் தேர்ச்சிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவென பரீட்சைகள், தேர்வுகள் என்பவற்றை நடாத்துதலும் அதற்கான சான்று பத்திரங்களை வழங்குதலும் ;

(ஆ) நூலக சேவை அபிவிருத்தி முன்னேற்றம் என்பவற்றிற்கு தேவையான தரவு, தகவல்களை வழங்குதல் ;

(இ) உள்ளூர், வெளியூர் புலமைப்பரிசில்களை வழங்குதல்.

24. அமைச்சரினால் விதிக்கப்படும் பணிப்புகளின்படி.

பணிப்புகளை விடுப்பத்திற்கு அமைச்சருக்குள்ள அதிகாரங்கள்.

(1) பதவிக்கு அமர்த்துதலுக்கான விதிமுறைகள்.
(2) கல்வி பயிற்சிகள், பரீட்சைகள் பற்றி விதிமுறைகள்.
(3) தேவைக்கேற்ப நிறுவனங்களுக்கு பணிப்பாளர்கள், உதவி பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், போதனாசிரியர்கள், வேறு உத்தியோகத்தர்கள் என்பவற்றை நியமனம் செய்தல், அவர்களுக்கான வேதனங்களை வழங்குதல் பற்றி விதிமுறைகளை விதிக்கலாம்.

25. இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைச்சர் அவர்களுக்கு.

பயிற்சியளித்தல் ஆராய்ச்சி நிலையங்களுக்கான வசதிகளை ஏற்படுத்தல் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பன தொடர்பாக அமைச்சருக்குள்ள அதிகாரங்கள்.

1. பயிற்சியளித்தல், ஆராய்ச்சி நிலையங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவது, பயிற்சி, வதிவிட வசதி, வேறு தேவைகளுக்காக கட்டிடங்களை அமைத்தல், அவற்றை பராமரித்தல், அவற்றுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல்.
2. மாணவர்களினதும், போதனாசிரியர்களினதும் ஒழுக்காறு நலன்புரி நடவடிக்கைகள், என்பவற்றை ஏற்படுத்துவதும் அவற்றை முறைபடுத்துதலும்.
3. இந்நிலையங்களினால் சான்று பத்திரங்களை வழங்க விதிமுறைகளை ஏற்படுத்தவும் அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும்.

பாகம் IV

**நூலகங்களை தாபித்தலும் நூலக சேவை நிர்வாகமும்**

26. 1 ஊவா மாகாணத்தினுள் நூலக நடவடிக்கைகளின் திட்டமிடல், அபிவிருத்தி, தொடர்புபடுத்தல் எனும் கருமங்கள் தொடர்பான முற்றுமுழுதான அதிகாரம் இந் நியதிச் சட்டத்தின் கீழ் சபைக்கு உரித்தாகும் என்பதுடன் அந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான கருமங்களையும், கருமக் குழுவினையும் கொண்டு செல்லுதல் கூடுமானதாகும்.

நூலக சேவைகள் நிர்வாகம்.

26. 2 மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக சபையினால் அமைக்கப்படும் நூலகங்களினதும் நிர்வாக நடவடிக்கைகளையும் அதனுடன் தொடர்பு பட்டதாக நிறைவேற்றுதல்.

26. 3 (i) நூலக சேவைகளுக்காக நிதியினை ஒதுக்கீடு செய்தல் ;
(ii) விசேடமான கொடுப்பனவினை மேற்கொள்ளுதல் ;
(iii) நூலக அதிபர்களையும் உப உத்தியோகத்தர்களையும் நியமிப்பதற்கான சேவை நிபந்தனைகளையும், பதவிக்கமர்த்துவதற்கான விதிமுறைகளையும் தயாரித்தல் ;
(iv) நூலகங்களுக்கிடையில் ஒத்துழைப்பு முறையினை ஏற்படுத்துதல் ;

நூலக சேவை நடவடிக்கைகள் தொடர்பாக கருத்திட்ட சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

(v) நூலக அதிபர்களுக்கும், உதவி ஊழியர்களுக்கும் தேவையான அறிவுரைகளை தயாரித்தல்;
(vi) நூலக சேவைக்குரிய அல்லது விடயத்திற்குரிய பதிப்புகளை வெளியிடுதல் ;
(vii) புள்ளி விவரங்கள், தகவல் தரவுகளை சேகரித்தல் ;
(viii) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் ;
(ix) மொழிப்பெயர்ப்பு சேவைகளை வழங்குதல் ;
(x) பயிற்சி நெறிகளை நடாத்துதல் ;
(xi) நுட்ப சேவைகளை வழங்குதல் ;
(xii) வாசித்தலுக்கான வசதிகள் ;
(xiii) கல்வி வசதிகள், புத்தக பராமரிப்பு வசதிகளை வழங்குதல் எனும் எல்லா நடவடிக்கைகளையும் கருமங்களையும் சபையினால் அதன் ஊழியர் குழாத்தினதும் இணைக்கப்பட்ட மத்திய நூலக சேவையாளர்களதும் ஒத்துழைப்புடன் நடாத்திச் செல்லலாம்.

26. 4 இந்த மாகாண நூலக சேவை சபையினால் அல்லது சபையின் ஒழுங்குபடுத்தலுடனும் ஆலோசனைகளினதும்படி -

(1) மாகாண சபையின் மத்திய நூலகம்.
(2) தேவைக்கேற்ப தீர்மானிக்கப்படும் வகையில் மாவட்ட அல்லது வலய நூல் நிலையங்கள்.
(3) பிரதேச மட்டத்தில் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்துடன் இணைந்ததாக பிரதேச மத்திய நூல் நிலையமொன்று படியும்.
(4) நூலக சேவை ஆலோசனை சபையினையும் வாசகர் வர்க்கத்தினையும் நடைமுறைப்படுத்துதல் இயலும்.

27. 1 மாகாண சபை மத்திய நூலகம் -

(அ) தேசிய நூலகமானது தேசிய மட்டத்தில் ஆற்றும் அனைத்து கருமங்களையும், சபை நிர்வாகத்திற்குட்பட்டதாக மாகாண மட்டத்தில் ஆற்றுவதனை மாகாண சபையின் மத்திய நூலகத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது ;

(ஆ) அதற்கேற்ப அம் மாகாண சபை மத்திய நூலகமானது மாகாணத்திலுள்ள தலைமை நூல் நிலையமாவதுடன், மாகாணத்தினுள் அனைத்து மாவட்டங்களினதும் / வலயங்களிலும், பிரதேச ஆரம்ப நூல் நிலையங்களினதும், ஏனைய அனைத்து நூலகங்களினதும் தாய் நூலகமாகும் ;

(இ) அவ்வாறே மாகாணத்தினுள் அனைத்து நூல் நிலைய சேவைகளையும் தொடர்புபடுத்துவது இந்த மாகாண சபை மத்திய நூலகத்தின் மூலம் நிறைவேற்றப்படும்.

27. 2 மாவட்ட மத்திய நூலகம் -

(அ) சபையினதும் மாகாண சபை மத்திய நூலகத்தினதும் கண்காணிப்பிற்கும் நிர்வாகத்திற்கும் உட்பட்டதாக சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு மாவட்ட மட்டத்தில் அல்லது நூலக சேவையினை முறையாக மேற்கொள்ள ஒதுக்கப்படும் வலய மட்டத்தில், மாவட்ட நூல் நிலையங்களை அமைக்கலாம் ;

(ஆ) மாவட்டத்தில் அல்லது குறிப்பிட்ட மாகாண வலயத்தினுள் நூலக சேவை நடவடிக்கைகளை தொடர்புபடுத்துவது மாவட்ட மட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் மாகாண மத்திய நூலகத்தினை பிரதிநிதித்துவபடுத்துவது நூலக சேவையினை வழங்குவது நூலகங்களுக்கிடையில் புத்தகங்களை பரிமாற்றம் செய்தல், தொடர்புபடுத்தல், சபை மாகாண மத்திய நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அல்லது அறிமுகப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் குறிப்பிட்ட பிரிவினுள் நடைமுறைப்படுத்துவது மாவட்ட மத்திய நூலகத்தின் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும் ;

(இ) குறிப்பிட்ட பிரிவில் ஏனைய அனைத்து நூலகங்களினதும் தாய் நூலகமாக இது விளங்குதல் வேண்டும்.

27. 3. பிரதேச மத்திய நூலகம் -

(அ) நூலக சேவை பிரதேச உப சபை பிரிவினுள் உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் நடாத்தப்பெறும் நூல் நிலையம் ஒன்றினை பிரதேச மத்திய நூலகமாக அபிவிருத்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) அதன் நேரடி நிறுவனத்தினை சபைக்கு அல்லது மத்திய நூல் நிலையத்திற்கு பாரப்படுத்தப்படாத எனினும் சபை அல்லது மாகாண மத்திய நூல் நிலையத்தின் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் அமைவாக அப்பிரிவினுள் அனைத்து நூலகங்களினதும் தாய் நூல் நிலையமாக அது செயற்படுதல் வேண்டும் ;

(இ) இது மாவட்ட மத்திய நூல் நிலையத்துடன் சேவை நிர்வாகம் அல்லது அடிப்படையில் செயற்படுதல் வேண்டும் ;

(ஈ) மத்திய நூல் நிலையமொன்று அல்லது பிரதேசத்தின் பிரதான நூல் நிலையத்தோடு தொடர்புபட்டதாக மேற்கொள்ளப்படும் நூலகங்களுக்கிடையிலான புத்தக பரிமாற்றல் செயல் திட்டத்தினை செயலாற்றுதல் வேண்டும் ;

(உ) பிரதேசத்தின் பிரதான நூல் நிலையமாக செயற்படுத்துவடனேயே நூல் நிலையங்களுக்கிடையே புத்தக பரிமாற்றம் போன்ற ஒத்துழைப்பு நடவடிக்கைகள், கூட்டு ஒழுங்குகள், பாதுகாப்பு, தொடர்பு என்பனவற்றையும் பிரதான நூலகத்தின் மூலம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

27. 4. நூலக சேவை ஆலோசனை சபைகளும் வாசகர் வட்டங்களும் -

(அ) சபையின் ஆலோசனைகளினதும், வழிகாட்டல்களுக்கும் கீழ் சபையினால் விதிக்கப்படும் பணிப்புகளுக்கும் விதிப்புகளுக்கும் அமைவாக அனைத்து மத்திய பிரதான நூலகங்களுக்கும் அனைத்து பொது நூலகங்களுக்கும் இணைக்கப்பட்டதான ஆலோசனை சபையினையும், வாசகர் வட்டங்களையும் அமைத்தல் இயலும் ;

(ஆ) இச்சபைகளினதும், வட்டங்களினதும் நடைமுறைகளும் வேறு விடங்கள் தொடர்பாக தேவைப்படும் விதிகள் சபையினால் விதிக்கப்படும்.

## V ஆம் பிரிவு

28. (1) இந்நியதிச் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட சபைகள், உப சபைகள், குழுக்கள், சங்கங்கள் அல்லது வேறு எதும் அமைப்புகள், அதிகாரங்களை செயற்படுத்துதல், பொறுப்புகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக அமைச்சரினால் அச்சபைகள், உப சபைகள், குழுக்கள் சங்கங்கள், வேறு அமைப்புகள் என்பவற்றிற்கு பொதுவான அல்லது விசேடமான விதிகளை விதிக்கக்கூடும் என்பதுடன், அந்தந்த சபைகள், உப சபைகள், குழுக்கள், சங்கங்கள், அல்லது அமைப்புகள் என்பன அவ்விதிகளை செயற்படுத்துதல் வேண்டும். *பொது விதிமுறைகள் அமைச்சருக்குரிய பொதுவான விதிமுறைகள் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.*

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட சபைகள், குழுக்கள், சங்கங்கள், அமைப்புக்கள் சொத்துக்களின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள், வேறு தகவல்கள் தமக்கு தேவைப்பட்ட பிரகாரம் தமக்கு சமர்ப்பிக்கும்படி அமைச்சரினால் அந்தந்த சபைகளுக்கு, உப சபைகளுக்கு, குழுக்களுக்கு, சங்கங்களுக்கு அல்லது வேறு அமைப்புகளுக்கு முன் விடுக்கப்பட்ட விதிகளை செய்ய முடியும் என்பதுடன், அச்சபைகள் சம்பந்தபட்ட குழுக்கள், சங்கங்கள் என்பன அவ் அனைத்து விதிகளுக்கும் அமைவாக செயற்படுதல் வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட சபைகளின் உப சபைகளின் குழுக்களின் வேறு அமைப்புகளின் அனைத்து நடவடிக்கைகள் அல்லது குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தமக்கு உறுதிப்படுத்தக்கூடிய ஒருவர் மூலம் பரிசீலிக்கும்படி அமைச்சர் அவ்வப்போது செய்ய இயலுமாவதுடன், அவ்வாறு செய்யும் போது அவ்வாறான எல்லா விதிகளையும் நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதனை அந்தந்த சபைகள், உப சபைகள், குழுக்கள், சங்கங்கள் அல்லது வேறு அமைப்புகளினால் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பணிப்புகளை ஆக்கும் அதி காரம்.

*29.* (1) ஊவா மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இலங்கையின் அல்லது வெளிநாடுகளில் நூலக அதிபர் ஒருவர் அல்லது நூலகங்களின் அதிபர் குழுவொன்று பங்குபற்றவும் அக்கரும கட்டுப்பாட்டிற்காக அமைச்சர் பணிப்புகளை விடுக்க இயலும்.

(2) சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கவேண்டிய குறைந்தபட்ச வசதிகள் பற்றி பணிப்புகளையும் தரக்கட்டுபாடுகளையும் அமைச்சர் விடுக்க இயலும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கொள்கைகள், விதிமுறைகள் நடைமுறைபடுத்தும்போது அல்லது அதிகார பிரயோகத்தின் போது பணிக்கவோ இச்சட்டத்தின் கீழ் பிற்பபிக்க இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்காகவும் அமைச்சர் பணிப்புகளை பிரயோகிக்கலாம்.

(4) அமைச்சரினால் பிரயோகிக்கப்படும் அனைத்து பணிப்புகளும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும் என்பதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படும் தினத்தில் அல்லது பணிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய முன்னைய தினத்தில் இருந்து அது நடைமுறைப்படுத்தப்படும் அமைச்சரினால் தயாரிக்கப்படும். அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து பணிப்புகளும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட அங்கீகரிக்கப்படாத திகதியில் இருந்து செல்லுபடியாகும் என கொள்ளப்பட்டாலும், அதன் கீழ் முன்னர் ஆற்றப்பட்ட எதற்கும் அதனால் வேறு விளைதல் கூடாது அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட பணிப்பெதுவும் செல்லுபடியாகும் தினமென்பது வர்த்தமானியில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

வேதனங்கள் கொடுப்பனவுகள்.

*30.* இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் மாகாண நூலக சேவை சபையினதும், மத்திய நூலகங்களினதும் ஊழியர்களுக்கும் சபையின் உப சபை உறுப்பினர்களுக்கு சபையின் சிபாரிசுடன் பொருத்தமான வேதனம், கொடுப்பனவு அல்லது வேறு ஏதும் செலுத்தல்களை தீர்மானிக்கவும், அது தொடர்பான தேவையான பணிப்புகளை செய்யவும் அமைச்சருக்கு தத்துவமுண்டு.

இலங்கை தேசிய நூலகத்துடனும் சுவடிகள் சபை யுடனுமான கடப் பாடுகள்.

*31.* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்காக இலங்கை நூலக சேவை சபையினால் (தேசிய) தயாரிக்கப்பட்ட தேசிய நூலக சேவை கொள்கைகளுக்கமைவாகவும் வழங்கப்படும் ஆலோசனைகளை கவனத்திற்கு கொண்டு நூலக சேவை நடவடிக்கைகளில் இலங்கையினுள் பொதுவானதான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கூடியதாக இலங்கை தேசிய நூலக சபையுடன் தேவையானபோது மிக சமீபமான ஒத்துழைப்புடன் கருமமாற்றவும் ஊவா மாகாண நூலக சேவை சபையின் பொறுப்பாகும்.

பொருள் கோடல் :

*32.* (அ) (1) சொற்கள் சம்பந்தமாக பொருள்கோடல் தேவையானபோதேயல்லாது இந் நியதிச் சட்டத்தில் அமைச்சர் என்பது ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரென பொருள்படுவதுடன், அமைச்சு என்பதும் அவ்வாறே பொருள் கொள்ளப்படுவதுமாகும்.

(2) செயலாளர் என்பது ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

(3) நூலக தகவல், ஏடுகள் என்பது அமைச்சின் செயலாளரினால் இந்நியதிச் சட்டத்தின் கருமங்களுக்காக நூலக தகவல், ஏடுகள் சேவையாக ஏற்றுக் கொள்ளப்படும் எவ்வகையிலுமான நூலக சேவை, தகவல் சேவை என்பன அடங்கும்.

(4) உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் என்பதில் மாநகர சபையின் நகர பிதாக்களும் உட்படும்.

(ஆ) இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்காக நூலக நடவடிக்கைகளின்போது தேவைப்படும். பிரயோகப்படும் பிரிவுகளில் பொருள் கோடல்கள் பின்வருமாறு :-

(1) நூலகங்களுக்கிடையிலான சேவை - நூல்களை வழங்கும் நூலகமொன்றில் இல்லா நூல்களை வேறொரு நூலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுதல், பிரதேச, வலய சர்வதேச அமைப்புக்கள் தொடர்புபட்ட நூலகங்களில் இருந்து புத்தக பரிமாற்றத்திற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல்.

(2) இணைக்கப்பட்ட சுட்டு பல்வேறு நூல் நிலையங்களிலும் பிரயோகிக்கப்படும் நூலகப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட சுட்டெண் முறையாகும். அது ஆசிரியர் நூலின் பெயர் விடயம் என வகைப்படுத்தப்பட்ட சுட்டெண் முறையாக இருக்கலாம்.

(3) நடமாடும் நூல் நிலையம் - நூல் நிலையப் பொருட்களை வைக்கக் கூடியதான வண்டி ஒன்றினை தயார் செய்து அதன் மூலம் ஏனைய பிரதேசங்களுக்கு நூலக சேவையினை வியாபித்தல்.

(4) நூல் நிலையம்/ சுவடிகள் நிலையம் - புத்தகங்கள் மஞ்சரிகள் ஒளி- ஒலி ஊடகங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும் நிலையம் வேறு பிரதிகள் இல்லாத கணணிப்பதிப்பு பொருட்கள் என்பவற்றை பாதுகாத்து வாசகர்களின் தேவைக்கு வழங்குவதற்கான வசதிகளை நூலகங்கள் வழங்கும்.

புத்தகங்கள், மஞ்சரிகள், விழிப்புலன் ஊடகங்கள் என்பன பற்றிய தகவல்கள் அடங்கிய ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு விநியோகிப்பதற்கான ஒழுங்குபடுத்துப்பட்ட பெயர் பட்டியல் போன்றவற்றை தயாரிப்பது நூலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படும்.

(5) நூலகக் குழுக்கள் - நூலகங்கள் தொடர்புபட்டதாக ஆலோசனை சேவைகளையும், காரிய சித்திகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒத்துழைக்கும் தொண்டர் அமைப்பு.

(6) நூலக நிதியம் - மாகாண சபை, பிரதேச மட்டத்தில் அனைத்து வகையாக நூலகங்களுக்கும் உதவுவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமைக்கப்பட்ட நிதியம்.

(7) நூலக வளங்கள் - வாசகர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக புதிக்கப்பட்ட நூல்கள், மஞ்சரிகள், செய்தித்தாள்கள், ஒளி /ஒலி ஊடகங்கள், பொருட்கள் வரைபடங்கள் கையெழுத்து பிரதிகள் என்பன நூலக வளங்களாகும்.

(8) மத்திய நூலகம் - அனைத்து நூலகங்களுக்குமிடையில் பிரதான நூல் நிலையமாக விளங்குவது அது அனைவருக்கும் பங்கு பற்றக்கூடியதான மத்திய நூல் நிலையமாகும் நிறுவாக நடவடிக்கைகள், ஏனைய நூல் நிலையங்களுக்கான வழிகாட்டல்கள் என்பனவற்றை மேற்கொள்வது மத்திய நூலகத்தினாலேயே ஆகும் அது பிரதான நூல் நிலையம் எனவும் குறிக்கப்படும்.

(9) ஒரு முகப்படுத்தப்பட்ட சுட்டுமுறை - பிரதான நூலகமொன்றினால் ஏனைய நூல் நிலையங்களுக்கான சுட்டெண் முறையினை தயாரித்தல் பதிப்பிட்டு வழங்குதல், இதன் மூலம் அனைத்து நூலகங்களுக்கிடையிலும் ஒரு முகமான சுட்டெண் முறையினை மேற்கொள்ள கூடுமாயிருக்கும்.

(10) கூட்டு ஒத்துழைப்பு - மாவட்ட மத்திய நூலகம், அனைத்து நூலகங்களுக்கான ஒரே நிலையத்திலிந்து புத்தகங்களுக்காக கொள்வனவு கட்டளை வழங்குதல், புத்தகங்களை கொள்வனவு செய்தல், உதவிகள், நன்கொடைகள் வழங்கும் ஸ்தாபனங்களிடமிருந்து கிடைக்கப்படும்.

(11) பாதுகாப்பு - நூலக பொருட்களின் நீண்ட கால நிலைப்பிற்காக மேற்கொள்ளப்படுகின்ற மீளவமைப்புக்கள், லெமினேட் செய்தல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை நூலக பொருட்களின் பெறுமதிகளை இயற்கை பௌதீக தீங்குகளிடமிருந்து பாதுகாத்தலுக்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது இதன் கருத்தாகும்.

(12) விஸ்தரிப்புச் சேவை நூலக கண்காட்சி சொற்பாழிவுகள், கருத்தரங்குகள் போன்ற செயலமர்வுகள் வாசகர் வட்டங்கள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு நூலகத்தினை கல்வி மையமொன்றாக எடுத்துக் காட்டுவதாக கொள்ளப்படுகின்ற சேவைகளை இது குறிக்கும்.

(13) விஞ்ஞான வலையமைப்பு - பூகோல வமைப்பு அடிப்படையில் பல நூல் நிலையங்கள் கூட்டாக ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் ஒன்றுபட்டு தகவல் பரிமாற்றங்களை செய்து கொள்வது என்பது இதன் கருத்தாகும்.

(இ) இந்நியதிச் சட்டத்தின் பொருட் கோடலில் அல்லது வேறு ஏதுமொரு விடயத்தில் இதன் சிங்கள பிரதியே மூலப்பிரதியாக ஏற்றல் வேண்டும்.

8- 122/4

**ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை பற்றிய நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் 2001.12.11 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட:டு ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட, பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யு. எம். எம். ஜீ. அபேசிங்ஹ பண்டா,
செயலாளர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண சபை அலுவலகம்,
பதுளை,
2012, யூன் 5.

**ஊவா மாகாண மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை பற்றிய நியதிச் சட்டம்**

முன்னுரை

ஊவா மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் ஊவா மாகாணத்திற்கு ஏற்புடையதான அளவிற்கு ஊவா மாகாணத்துடன் தொடர்புடையதான மாகாணங்களுக்கிடையேயான பயணிகள் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குப்படுத்தவும், அந்நடவடிக்கைகளுடன் தொடர்புடையதான ஏனைய நடவடிக்கைகளுக்காகவும், அவ் ஒழுங்குப்படுத்தும் நோக்கத்தினை கருத்தின் கொண்டு ஊவா மாகாணத்திற்கு பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை” எனும் பெயரில் அதிகார சபை ஒன்றினை தாபிப்பதற்கான நியதி சட்டமாகும்.

ஊவா மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்.

1. இந்நியதிச் சட்டமானது ஊவா மாகாணத்தின் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச்சட்டம்” எனும் பெயரில் காட்டப்படும்.

நடைமுறைப்படுத் தும் திகதி.

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் விதிகள் மூலம் ஆளுநரினால் நிர்ணயிக்கப்படுகின்ற (இதனகத்து இதன் பின்னர் “குறித்த திகதி” எனக் குறிப்பிடப்படுகின்ற) திகதி தொடக்கம் இந்நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**முதலாம் பாகம் :**

**ஊவா மாகாணத்திற்கென பயணிகள் சேவை அதிகார சபை ஒன்றினை ஏற்படுத்தல்**

சபை அதிகாரம்.

3. இந்நியதிச் சட்டத்தில் இதன் பின்னர் “அதிகார சபை” எனும் பெயரில் குறிப்பிடப்படுகின்ற “ஊவா மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை” எனும் பெயரில் காட்டப்படும் மாகாண அதிகார சபை ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. மூன்றாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் அதிகார சபையானது இதையறாக அமர்வுடையதாகவும் பொதுவான முத்திரையினை உடைய கூட்டுத்தாபனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பெயரால் வழக்கு தாக்கல் செய்யவும், அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவும் கூடுமானதாக இருக்கும்.

உப அலுவலகம்.

5. அதிகார சபையினால் அதன் கருத்திற்கு எற்பவும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் பயணிகள் போக்குவரத்து சேவையினை ஒழுங்குறப்படுத்தும் விடயத்திற்கு குறித்தான கருமங்கள், அதிகாரங்களை அளித்தல், பன்முகப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் அதிகார சபையின் உப அலுவலகங்களை நிறுவி நடாத்திக் கொண்டு செல்லுதலை மேற்கொள்ளல் முடியும்.

6. (அ) அதிகார சபையானது, பணிப்பாளர் சபை அடங்கலாக 11 உறுப்பினர்களைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் 5 பேர் உத்தியோகபூர்வ உறுப்பினர்களாகவும், 6 பேர் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் ; அதிகாரசபையின் அமைப்பு.

(ஆ) அதிகார சபையின் அனைத்து உறுப்பினர்களும் அமைச்சரின் ஒப்பந்தத்துடன் கூடிய நியமனத்தை பெறுதல் வேண்டும். அவ்வாறான அனைத்து நியமனங்களும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும் ;

(இ) உத்தியோக தோரணையில் நியமனம் செய்யப்படுகின்ற அதிகார சபையின் உறுப்பினர்கள் பின்வருவோராய் இருத்தல் வேண்டும் ; உத்தியோக தோரணையிலான உறுப்பினர்கள்.

1. பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது தான் பொருத்தமானவர் எனக்கருதுகின்ற அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை தனக்காக செயலாளர் பெயர் குறிப்பிடுதல் இயலும்.

2. பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான மாகாண அமைச்சில் கடமைபுரியும் உதவிச் செயலாளர் தரத்திற்கு குறையாத, அமைச்சரினால், பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் ஒருவர்.

3. நிதி விடயத்திற்கு பொறுப்பான மாகாண அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் அவரின் அமைச்சின் கணக்காளர் ஒருவர்.

4. மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அவரைவிட உயர்தர உத்தியோகத்தர் ஒருவர்.

5. ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற உதவி மாகாண ஆணையாளர் ஒருவர்.

(ஈ) அதிகார சபையின் "நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள்" பின்வருவோராய் இருத்தல் வேண்டும். நியமனம் செய்யப் படும் உறுப்பினர் கள்.

1. போக்குவரத்து பொருளியல் விஞ்ஞானம், நிர்வாகம் அல்லது பொறியியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு கூடுதலான போதிய அனுபவம், தகைமைகள் அல்லது ஆற்றல்கள் கொண்டுள்ள என அமைச்சரினால் திருப்தியடையக்கூடிய மூன்று பேர்கள்.

2. ஊவா மாகாண பயணிகளை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய அமைச்சரின் விருப்பத்திற்கமைய தெரிவு செய்யப்பட்ட ஒருவர்.

3. ஊவா மாகாணத்தின் தனியார் பஸ் உரிமையாளர்களை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய ஊவா மாகாணத்திற்கான பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்.

4. அமைச்சரின் விருப்பத்திற்கமைய தீர்மானிக்கப்படுகின்ற கீழ் குறிப்பிடப்படுகின்ற உத்தியோகத்தர்களில் ஒருவர்.

(அ) 1. இலங்கை போக்குவரத்து சபையின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற பிரதேசப் பிரதான முகாமையாளர் பதவிக்கு குறையாத சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது.

2. இலங்கை போக்குவரத்து சபைக்கு பதிலீடு செய்வதான தேசிய மட்டத்தில் அல்லது பிரதேச மட்டத்தில் அல்லது அமைப்பு ஒன்றின் தலைவர் அல்லது பிரதேச மட்டத் தலைவர் ஒருவரினால் நியமனம் செய்யப்படுகின்ற மேற்படி (அ) (1) உபசரத்தின்படியான உத்தியோகத்தர் தரத்திற்கு குறையாத சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது.

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரினால் பெயர் குறிப்பிடப்படும் உதவிப் பணிப்பாளர் தரத்திற்கு குறையாத சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

அதிகார சபையின் தலைவர்.

7. (அ) அதிகாரசபையின் உறுப்பினர்களில் இருந்து ஒருவர் அதிகார சபையின் தலைவராக அமைச்சரினால் நியமனம் செய்யப்படல் வேண்டும் ;

அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம்.

(ஆ) அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரம் தலைவருக்கு அளிக்கப்படும். அவ்வாறான அதிகாரம் அதிகார சபையின் ஒருமைப்பாட்டுடன் பொது முகாமையாளருக்கும், அவர் மூலம் அதிகார சபையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொறுப்பளிக்கப்படலாம்.

அவசர கால அதிகாரங்கள்.

(இ) பொறுப்பளிக்கப்படுகின்ற நிறைவேற்று அதிகாரம் எவற்றையும் அவசர காலத்தின் போது தாமே செயற்படுத்துவதற்கு தலைவருக்கு தடங்கள் ஏதும் இருத்தல் ஆகாது.

உறுப்பினராவதற்கான தகைமைகள்.

8. எவரேனும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவராகவோ அல்லது மாகாண சபை ஒன்றின் உறுப்பினராகவோ அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் உறுப்பினராகவோ இருப்பாராயினும் அல்லது அவ்வாறு ஒருவராக்கப்படுவாராயினும் அவ்வாறான ஒருவர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக நியமனம் செய்யப்படவோ, அவ்வாறான உறுப்பினர் ஒருவராக கடமைப்புரியவோ தகைமையற்றவராவார்.

அமைச்சருக்கு தகவல்களை வழங்குதல்.

9. எவரேனும் ஒருவர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் குறிப்பிட்ட அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக அவரின் கருமங்களை ஆற்றுவதற்கு எதிராக தாக்கம் தரக்கூடியதான நிதி அல்லது வேறுவகையிலான தொடர்புகள் அல்லது ஏதுக்கள் அரசாங்கத்திற்கோ, அல்லது எந்த ஒரு மாகாண சபைக்கோ அல்லது உள்ளூராட்சி நிறுவனத்திற்கோ அவருடன் இல்லையென அமைச்சர் திருப்தியுருதல் வேண்டும். எந்த ஒரு உறுப்பினருக்கும் அவ்வாறான தொடர்புகளோ அல்லது ஏதுக்களோ இல்லை என்பதனை காலத்திற்கு காலம் அமைச்சர் அவர்கள் திருப்தியுருதல் வேண்டும். உறுப்பினர் ஒருவராக அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற ஒரு நபர் அல்லது உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கென அமைச்சர் எண்ணியுள்ள ஒரு நபர், இச்சரத்தின்படி தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக, தமக்கு தேவையென அமைச்சர் கருதும் தகவல்களை அமைச்சருக்கு வழங்குதல் வேண்டும்.

அதிகார சபையின் ஒப்பந்தங்கள்.

10. (1) அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் அல்லது செயற்படுத்த உத்தேசித்துள்ள ஒப்பந்த வேலை எதற்கும் நேரடியாக அல்லது சுழற்சிமுறையில் தொடர்புக் கொண்டுள்ள அதிகார சபையின் எந்த ஒரு உறுப்பினரும் அத்தொடர்பினை பற்றி அதிகார சபையின் கிட்டியதான கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்கள், கூட்டறிக்கையிலும் குறிக்கப்படுதலும் வேண்டும், மேலும் அவ்வாறான தொடர்பினைக் கொண்டுள்ள உறுப்பினர் அவ் ஒப்பந்தம் சம்பந்தமான எந்த ஒரு உரையாடலிலும் அல்லது தீர்மானத்திலும் பங்குப்பற்றலாகாது.

(2) தமது உத்தியோக பதவி அடிப்படையில் ஒப்பந்தங்கள் சம்பந்தமாக கடமைப்புரியும் எந்த ஒரு உறுப்பினருக்கும் மேற்படி (1) ஆம் உப சரத்து ஏற்புடையதாகவிருக்கக்கூடாது.

அதிகார சபை உறுப்பினரின் பதவிக் காலம்.

11. இங்கு 12 ஆம் சரத்தின்படி மாகாண போக்குவரத்து அதிகார சபையின் அனைத்து நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களும் பதவிக்காலம், நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து 3 வருடங்களாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் காலம் முடிவடைந்தததின் பேரில் பதவி முடிவடையும் உறுப்பினர் மீண்டும் நியமனம் செய்யப்பட தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு இருப்பினும் அதிகார சபைக்கு, நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் வெற்றிடத்திற்கு நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர் ஒருவர் அல்லது அவர் முன்னர் பதவியிலிருந்து கேட்டு விலகியிருப்பின் அல்லது பதவியிலிருந்து விலக்கப்பட்டிருப்பின் அல்லது வேறு வழிகளில் பதவியை விட்டுக் நீங்கியிருப்பின் அல்லது தான் பதிலீடு செய்யும் உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவடையாத காலப்பகுதிக்கு மட்டும் பதவி வகித்தல் வேண்டும்.

அமைச்சரால் உறுப்பினர் ஒருவரினை பதவியிலிருந்து நீக்குதல்.

12. அமைச்சருக்கென அனுப்பப்படுகின்ற கடிதத்தின் மூலம் அதிகார சபையின் தலைவர் அல்லது உறுப்பினர் எவரும் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ளல் முடியும்.

உறுப்பினர்கள் கேட்டு விலகுதல்.

13. அதிகார சபையின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் இலங்கையை விட்டும் வெளிநாடு சென்றிருப்பதினால் அல்லது வேறு ஏதும் காரணத்தினால் அல்லது தற்காலிகமாக தனது பதவியின் கருமங்களை ஆற்றயியலாத சந்தர்ப்பங்களில் இதனகத்து 6 ஆம் சரத்தின் விதிமுறைக்கேற்ப அவருக்கு பதிலாக கடமையாற்ற வேறு ஒருவரை அமைச்சர் நியமித்தல் இயலும்.

உறுப்பினர் ஒருவர் இல்லாதவிடத்து.

14. போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும், ஊவா மாகாண நிதிவிடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற வேதனக் கொடுப்பனவுகள் அல்லது வேறு கொடுப்பனவுகளை அதிகார சபையின் நியதியிலிருந்து வழங்குதல் இயலும்.

15. (அ) அமைச்சரினால் விசேடமாக அல்லது அவசரம் எனக்கருதும் சந்தர்ப்பங்களில் அதிகாரம் சபைக்கு உரித்தான அதிகாரங்கள் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் அதிகார சபையின் தலைவருக்கு பொறுப்பளிக்கும் கட்டளை ஒன்றினை விடுக்கலாம். என்பதுடன் அவ்வாறான பொறுப்பளித்தலானது செயற்படுத்தக்கூடிய கால எல்லையையும் அக்கட்டளையில் உறுதிப்படுத்தல் வேண்டும் ; உறுப்பினர் களுக்கான தேஅ

16. (ஆ) அவ்வாறான கட்டளையினை தொடர்ந்து வருகின்ற சபைக்கூட்டத்திற்கு அங்கீகாரத்திற்காகவென சமர்ப்பித்தல் வேண்டும். விசேட அல்லது அவரது சந்தர்ப் பங்கள்.

17. (1) அதிகார சபையின் தலைவர், தான் சமூகமளித்திருக்கும் அதிகார சபையின் அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைமைத்தாங்குதல் வேண்டும். கூட்டம் எதற்கும் தலைவர் சமூகமளிக்காத, சமூமளிக்க முடியாதவிடத்து வருகைத் தந்துள்ள உறுப்பினர்களுன் கூட்டத்திற்கு தலைமைத்தாங்குவதற்காக தம்மில் ஒருவரை பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்துக் கொள்ளல் வேண்டும். கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல்.

(2) அதிகார சபையின் எக்கூட்டத்திற்கும் தேவையான நிறைவெண் தலைவருக்கு உட்பட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் வெற்றிடமான உறுப்பினர் தொகையினை விடுத்து, எஞ்சிய தொகையில் இரண்டில் ஒன்றிற்கு கூடுதலாய் இருத்தல் வேண்டும். நிறைவெண்.

(3) அதிகார சபையின் எந்த ஒருக் கூட்டத்திலும் தலைமை தாங்கும் பொருட்டு அவரது வாக்கிட்டு கூடுதலாக தீர்மானித்தல் வாக்கு ஒன்றும் இருத்தல் வேண்டும். தீர்மான வாக்கு.

(4) அதிகார சபையானது கூடவேண்டிய தொடர் எண்ணிக்கைகளும் சபை கூட்டங்களை நடாத்துதலும், அதிகார சபைக்கு அல்லது தலைவருக்கு இந்நியதிச்சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளை கவனத்திற்கு எடுத்தல் உட்பட கூட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட நடைமுறை விதிகள் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மேலும் ஏதேனும் ஒரு காரணத்திற்காக கூடுதல் வேண்டும் என அமைச்சரிடம் இருந்து கிடைக்கப்பெறுகின்ற அறிவித்தலின் பெயரிலும் அதிகார சபையானது கூடுதல் வேண்டும். கூட்டத் தொடர் களும் செயற்பாட்டு விதிகளும்.

18. (1) அதிகார சபையின் முத்திரையானது தலைவரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும். அதிகார சபையின் முத்திரை.

(2) அதிகார சபையின் முத்திரையானது அதிகார சபையினால் தீர்மானத்திற்கு அமைய மாற்றியமைக்கப்படலாம்.

(3) அதிகார சபையின் முத்திரையானது அவ்வதிகார சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையல்லமால் பத்திரமொன்றில் வைக்கப்படலாகாது என்பதுடன் தாம் சமூகமளித்திருப்பதினை உறுதிப்படுத்துவதற்காக அவ்விருவரும் சாட்சிகளாக அப்பத்திரத்தில் அல்லது உறுதிப்பத்திரத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

**இரண்டாம் பிரிவு அதிகார சபையின் அதிகாரங்களும், பொறுப்புக்களும், ஊழியர் கோப்பும்**

19. திறனாக போக்குவரத்து சேவையினை மேற்கொண்டு செல்வதற்காக அமைச்சரின் இசைவிற்கமைய, அவ்வப்போது தேவையெனக்கருதும் மாற்றங்களுக்குட்பட்டு மாகாண அதிகார சபைக்கு கீழ் குறிப்பிடப்படுகின்ற அதிகாரங்களும் கருமங்களும் பொறுப்பளிக்கப்படும். அதிகாரங்களும் கருமங்களும்.

(அ) ஊவா மாகாணத்தில் உள்ளேயும், ஊவா மாகாணத்துடன் தொடர்புடையதாக பயணிகள் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதும், ஏற்றுக்கொள்ள தக்கதான தரத்திலான போக்குவரத்து சேவை ஒன்று நிலவுகின்றமைப் பற்றி கவனத்துடன் இருப்பதும், மதிப்பீடு செய்வதும் அச்சேவைகளுக்கான தர அளவுகளை விதிப்பதும் ; தர அளவுகளை மதிப்பிடுதல்.

(ஆ) பஸ் வண்டிகளின் பயணங்களுக்கான நேர அட்டவணையினை தீர்மானித்தல், அந்நேர அட்டவணைப்படி பயண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பயண ஏற்பாட்டாளருக்கு விதித்தலும், பயண ஏற்பாட்டாளர்கள் அந்நேர அட்டவணையினை பின்பற்றுகிறார்களா என்பது பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது செயற்படுத்தல் ; நேர அட்டவணை.

(இ) ஒவ்வொரு கட்டணத்தின்படி பயணிகள் போக்குவரத்திற்காக பஸ் வண்டிகளை பயன்படுத்திக் கொள்ள ஆள் எவருக்கும் அதிகாரத்தினை வழங்குகின்ற பயணிகள் சேவை உத்தரவுபத்திரம் ஒன்றினை அல்லது அவ்வாறான வேறு ஒரு உத்தரவுபத்திரம் ஒன்றினை வழங்குதல், புதுப்பித்தல், திருத்துதல், ரத்து செய்தல் தொடர்பான விதிகளை விதித்தல் ; பயணிகள் சேவை உத்தரவுபத்திர விதி முறைகள்.

நிபந்தனை.

(ஈ) 3 ஆம் உபசரத்தின் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுபத்திரம் அல்லது வேறு உரிமைகளுக்குறிய தான நிபந்தனைகளை விதித்தல், உத்தரவுபத்திரம் பெறுநர்கள் அல்லது அவர்களின் ஊழியர்கள் அந்நிபந்தனைகளை கடைப்பிடிக்கின்றமையை கண்காணித்தலும், வேறு எழுத்திலான சட்டங்களின் விதிமுறைகளுக்கமைய அவ்வாறு கடைப்பிடிப்பதனை நடைமுறைப்படுத்தல் ;

தகவல்களை வழங்கள்.

(உ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நோக்கம் எதற்காகவும் தேவைப்படுவதான தகவல்களையும், அறிக்கைகளையும், அதிகார சபைக்கு வழங்குதல் வேண்டும் என இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்தினை சட்டத்தின் கீழ் அல்லது பயணிகள் சேவை உத்தரவுபத்திர பெறுநர் ஒருவரான ஆள் ஒருவருக்கு அல்லது வேறு ஒரு ஆளுக்கு பணித்தல் ;

கட்டணங்கள்.

(ஊ) பயணிகள் சேவை உத்தரவு பத்திரங்களுக்குரியதான விநியோகம், புதுப்பித்தல், திருத்தங்கள் செய்தல் என்பனவும் அவற்றிக்குரியதான வேறு கருமங்களுக்காகவென அளவிடப்படவேண்டிய கட்டணங்களை விதித்தலும், அவ்வப்போது திருத்தி அமைத்தலும் ;

பயணச்சேருகை பெயர் பலகை கள் என்பன.

(எ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்திலான சட்டம் ஒன்றின் கீழ் வழங்கப்பட்ட பயணிகள் சேவை உத்தரவுபத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயணிகள் போக்குவரத்திற்கென செலுத்தப்படுகின்ற பஸ் வண்டி ஒன்றில் தென்பட தக்கதாக வைக்கப்படவேண்டிய பயணச்சேர்கை பெயர் பலகை, குறியீடுகள், அடையாளங்கள் என்பன பற்றிய விதிமுறைகளை பிறப்பித்தல் ;

பேருந்துக்கான ஆவணங்கள்.

(ஏ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்திலான சட்டம் ஒன்றின் கீழ் வழங்கப்பட்ட பயணிகள் சேவை உத்தரவுபத்திரத்தின் படியான அதிகாரத்தின் கீழ் பயணிகள் இணைப்புடையதான விடயங்களுக்கான நிபந்தனைகளை விதித்தல், அனுமதிகளை வழங்குதல், கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல், தடுத்து வைத்தல் போன்றவை சம்பந்தமாக தீர்மானங்களை எடுத்தல் ;

பஸ் தரிப்பு நிலை யங்களின் நடை முறைகள்.

(ஃ) பஸ்தரிப்பு நிலையங்களின், பஸ் வண்டிகள் செலுத்துதல், முகாமைத்துவ நடவடிக்கைகள், நேர அட்டவணையினை செயற்படுத்துதல், பஸ் பயணங்களின் ஆரம்ப ஸ்தாபனங்களை தீர்மானித்தல், அவற்றின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக பஸ் தரிப்பிட நிலைய பொறுப்பாளர்கள், நேரக் குறிப்பீட்டாளர்கள், வேறு தேவையான ஊழியர்கள் என்பவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாகவும், அவர்களின் அதிகாரங்கள், கருமங்கள், பொறுப்புக்கள் என்பவற்றை நிர்ணயித்தல் சம்பந்தமான பணிப்புரைகளை விடுத்தல் ;

சகாய கட்டண முறை.

(க) பஸ் தரிப்பு நிலையங்களில் பயண முகாமை அலுவல்களுக்கு பொறுப்பான ஊழியர் கோப்பினால் பராமரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், கடிதங்கள், ஏடுகள் என்பனவும் அவற்றில் குறிப்பிடப்படவேண்டிய தகவல்கள் என்பவற்றை தீர்மானித்தலும் அவற்றின் பாதுகாப்பு பற்றிய பணிப்புகளை விடுத்தலும் ;

பயண ஏற்பாட் டாளர்களுக்கான ஊக்குவிப்பு.

(ச) சகாய கட்டண அடிப்படையில் பஸ் வண்டிகளில் பயணம் செய்வதற்கு பொருத்தமான பயணிகள் குழுக்களை அடையாளம் கண்டுகொள்ளலும், அங்கீகரித்தலும், அதிகார சபையானது உகந்தது என கருதுகின்ற முறைப்படி அவ்வாறான சகாய கட்டண முறையினை நடைமுறைப்படுத்தலுக்கான விதிமுறைகளை வகுத்தல் ;

(ட) மாகாணத்திலும் பொருளாதார ரீதியில் ஆதாரமற்ற மார்க்கங்களில் போதுமான பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்துவதினை உறுதிப்படுத்துவதற்காக, தேவையான போது, பயண ஏற்பாட்டாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் நிதி உதவி முறை ஒன்றினை நடைமுறைப் படுத்தல் ;

பயணிகள் பங்களிப்பு.

(த) பஸ் பயண ஏற்பாட்டாளர்களுக்கு கடன் வசதிமுறையில் அல்லது விசேட மதிவுரைகள் மூலம் அல்லது வேறு பொருத்தமான முறையில் உதவி கொடைகள், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் சம்பந்தமான விதிமுறைகளும், ஆலோசனை திட்டங்களும் அறிமுகப்படுத்தல், அவ்வாறான திட்டம் ஒன்றிற்காக ஊவா மாகாண சபையின் நிதி அல்லது அதற்கு கிடைக்கத்தக்கதான வருமானம் என்பன சம்பந்தமாகுமிடத்து அமைச்சரவையின் முன் அனுமதியினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் ;

சட்ட விரோத பயணிகள் போக்கு வரத்து

(ப) பஸ் தரிப்பு பயணிகள் போக்குவரத்து சேவையினை கட்டுப்படுத்தல், ஒழுங்குப்படுத்தல், பஸ் வண்டிகளின் தரங்களை மேன்படுத்தல் என்பவற்றிற்காக பயணிகளின் பங்களிப்பினை ஊக்குவித்தல், அதற்காகவென பயணிகள் சங்கங்களை அமைத்தல் அவ்வாறான சங்கங்களுக்கான விதிமுறைகளை வகுத்தல், அவற்றிற்கான வழிக்காட்டல்களையும், வேறு தேவையான உதவிகளை வழங்குவதற்கான விதிமுறைகளை வகுத்தல் ;

(ர) இந்நியதிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாற்றமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக, மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், விதிக்கப்பட வேண்டிய தண்டனைகள் பற்றிய விதிமுறைகளை பிறப்பித்தல் ;

(ii) ஊவா மாகாண எல்லைக்குள் பயணிகள் போக்குவரத்து சம்பந்தமான சட்ட விரோத செயல்களை கண்டுபிடித்தல், தடைசெய்தல், அவற்றிற்கு எதிராக செயற்படும் நோக்கில் அவசர பரிசோதனை குழுக்களை ஸ்தாபித்தல் அல்லது ஸ்தாபிக்க வைத்தியம், அவ்வாறான குழுக்களின் அதிகாரங்கள் நடவடிக்கைகள் என்பவற்றை தீர்மானித்தலும் அவற்றிற்கான விதிமுறைகளை பிறப்பித்தலும் ;

(ய) வீதி பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகளில் கடமை புரியும் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்குமாக- சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்குமான விதி.

(1) சேவை உரிமைகள் ;
(2) தொழில் தகைமைகள் ;
(3) கடமையில் ஈடுப்பட்டிருக்கும் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களும் ;
(4) கடமையில் ஈடுபட்டிருக்கும் போது அணியவேண்டிய சீருடை, இலாஞ்சனை அல்லது குறியீடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விதிகளை பிறப்பித்தல்.

(ற) மாகாணங்களுக்கிடையில் செலுத்தப்படும் பயணிகள் போக்குவரத்துச் சேவை பஸ் வண்டிகள் தொடர்பாக, பயணிகள் சேவை உத்தரவு பத்திரங்களை வழங்குதல், நேர அட்டவணையினை விதித்தல், பல்வேறு கட்டணங்களை அறவிடுதலும் அவ்வாறான பஸ் வண்டிகள் மாகாணத்தினுள் செலுத்தப்படுதலும், மாகாணத்திலுள்ள பஸ் தரிப்பு நிலையங்களில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விதிகளை பிறப்பித்தல் ; மாகாணங்களுக் கிடையிலான பஸ் சேவை.

(ல) அதிகார சபையின் நோக்கங்களையும், கட்டுப்பாடுகளையும் நிறைவேற்றவும், அதிகாரங்களை பிரயோகிக்கவும் தேவையான விதிகளை பிறப்பித்தலும் அக்குறிக்கோளுக்காக இலங்கையினுள்ளே அல்லது வெளியில் ஆள் எவருடனும் அல்லது நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்களை செய்து கொள்ளல் ; ஒப்பந்தங்களும்.

(வ) அசையும், அசையா சொத்துக்கள் எதையும் சுவிகரித்துக் கொள்ளுதல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெற்றுக்கொள்ளுதல், பொறுப்பில் வைத்துக் கொள்ளுதல், பிரயோசனப்படுத்துதலும், குறிக்கப்பட்ட கருமம் எதற்காகவும் என விடுத்தல் ; சொத்துக்ளை சுவிகரித்தல்

(ள) அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் சேவைகள், வசதிகள் அல்லது சொத்துக்களுக்காக கட்டணங்களை அறவிடுதல் ;

(ழ) நிதியாகவோ அல்லது பொருட்களாகவோ கொடைகள், அன்பளிப்புகள், மானியங்கள், அல்லது பரிசளிப்புகள் என்பவற்றை ஏற்றுக்கொள்ளலும் அவற்றை அதிகார சபையின் நோக்கங்களுக்காக உபயோகப்படுத்தல் ;

20. இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதேனும் விடயம் தொடர்பாக அதிகார சபையினால் தயாரிக்கப்படும் எந்த ஒரு விதியும் அமைச்சின் அங்கீகாரத்திற்குப் பின்னர் தீர்மானிக்கப்படுகின்ற நாளிலிருந்து செயற்படுத்தப்பட வேண்டும், என்பதுடன் அவ்விதிகள் வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும். மேலும் அமைச்சரினால் அவ்விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு திகதியிலிருந்து 45 நாட்களுக்குள்ளாக மாகாண சபையின் அங்கீகாரத்திற்கென சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விதிகளை வர்த்த மானியில் பிர சுரிக்கப்படுதல் வேண்டும்.

21. அமைச்சர்கள் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அதிகார சபையில் கருமங்களை மேற்கொண்டு செல்வதற்காக தேவையான அலுவலக ஊழியர் கோப்பினை தீர்மானித்தலும் அவ் ஊழியர் கோப்பிற்கு உரியதான கீழ் குறிப்பிடப்படுகின்ற கருமங்களை மேற்கொள்ள அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு. அலுவலக கோப்பு பற்றிய அதிகாரங் கள்.

(1) கல்வி, தொழில், ஏனைய தகைமைகள், சம்பள அளவுகள் உட்பட பதவிக்கு அமர்தல் விதிமுறைகளை தீர்மானித்தல் ;
(2) நியமனம் செய்தல் பதவி உயர்த்துதல், சம்பளம், படிகள், வேறு கொடுப்பனவுகள், ஒழுக்காற்று தண்டனைகள் சேவையினை இல்லாமாக்குதல், உட்பட ஒழுக்க கட்டுப்பாடு, பொதுவான நடவடிக்கைகள், பொதுவான நடத்தைகள், விடுமுறைகள் என்பன பற்றியும், ஆட்கள் நிர்வாகம் பற்றியதுமான விதிகளை பிறப்பித்தல் ;

(3) ஊழியர் கோப்பின் வினைத்திறனை மேன்படுத்துவதற்கு தேவையான ஊழியர் கோப்பு அபிவிருத்தி முறைகளை ஏற்படுத்தல் ;

(4) ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தினை செயற்படுத்துதல் ;

(5) நலன்னோன்பு வசதிகளை செயற்படுத்துதல் ;

புது நியமனங்கள், தற்காலிக அல்லது விடுவித்தல், இரட்டை அடிப் படையில் அல்லது ஒப்பந்த அடிப் படையில் சேவையில் சேர்த்துக் கொள்ளும் அதிகாரம்.

22. (1) மேற்குறித்த 22 ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் ஊழியர்களை சேர்த்துக் கொள்ளவும்.

(2) அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் இருக்கின்ற ஊழியர், உரிய அதிகாரிகளின் ஒருப்பாற்றுடன் அரட்டை அடிப்படையில் அல்லது ஒப்பந்த அல்லது வேறு ஏதேனும் வகையில் தம் சேவையில் சேர்த்துக்கொள்ள அதிகார சபைக்கு அதிகாரம் உள்ளது.

(3) 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஊவா வீதிப்பயணிகள் போக்குவரத்து சேவைகள் நியதிச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காகவே ஏதேனும் ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்து அதிகார சபை செயற்படும் திகதி வரையில் திருப்பத்திகரமாக தொடர்ந்து சேவையாற்றும் ஊழியர்கள், போக்குவரத்து அதிகார சபையானது ஏற்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற சேவைக்கு அமர்த்தும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான குறைந்த பட்ச தகைமைகளை பூர்த்தி செய்திருப்பாராயின் அவரை அதிகார சபை பதவி ஒன்றிற்கு சேர்த்துக்கொள்ளுதல் இயலும். எவ்வாறாயினும் குறைந்த பட்ச கல்வி தகைமைகள் அற்ற ஊழியர்கள் சம்பந்தமாக, அமைச்சரின் ஒருப்பாற்றுடன் முதற்தடவையாக சேர்த்துக் கொள்வதற்காக கல்வி தகைமைகளை தளர்த்த முடியும்.

தற்காலிக விடுவித்தல் அடிப்படையில் இருக்கும் ஊழியர் கோப்பு.

(4) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருக்கும் எந்த ஒரு உத்தியோகத்தரும் அல்லது ஊழியர் ஒருவர் அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு இரட்டை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் -

நிரந்தரமும், ஓய்வூதியமும் கொண்ட ஊழியர்கள்.

(அ) அவர் அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், நிரந்தர சேவையொன்றினை கொண்டிருப்பாராயின் அப்பதவியானது பதவி ஊதிய பிரமான குறிப்பின் கீழ் ஓய்வூதியத்துக்கு உரித்துடைய பதவியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால் அதிகார சபையின் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் காலப்பகுதியில் அரசாங்கத்தின் கொள்கையிலான சம்பளம் அற்ற விடுமுறையில் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் கடமைக்காக வரவேண்டியதில்லை எனக் கருதப்பட வேண்டும் என்பதுடன் அதற்கமைய ஓய்வூதிய பிரமாண குறிப்பின் 10 (1) ஆம் பந்தியானது அவர் சம்பந்தப்பட்டதாயிருத்தல் வேண்டும். மேலும் அவர் அதிகார சபையில் சேவையில் இருக்கின்ற எல்லா முழு மாதங்களுக்கும் அவரின் அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியில் அவருக்கு கொடுக்கவேண்டிய சம்பளத்தின் இரண்டிற்கு அதிகப்படாத தொகையினை அதிகாரசபையின் நிதியத்தில் இருந்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கூட்டு நிதியத்திற்கு அறவிடப்படுபவதற்காக திறைசேரிக்கு அல்லது மாகாண சபையின் நிதியத்திற்கு செலுத்தல் வேண்டும் ;

அ. கே. ச. நிதிப் பேரில் இருக்கும் ஊழியர்கள்.

(ஆ) அவர் அதிகாரசபையின் ஊழியர் கோப்பிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், அரசாங்க சேவை சகாய நிதிக்கு அங்கத்துவப் பணம் செலுத்துபவராக இருந்திருப்பின் அதிகார சபைக்கு அவர் ஆற்றும் சேவையானது அரசாங்கத்திற்கு அல்லது மாகாண சபையொன்றிற்கு ஆற்றுகின்ற சேவையாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கமைய அரசாங்க சேவை சகாய நிதிக்கு செலுத்த உட்பட்ட சந்தாவை அவர் அதிகார சபையில் சேவையிலிருக்கும் காலப்பகுதியிலும் தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் அவர் பேரில் அரசாங்க சேவை சகாய நிதிக்கு அரசாங்க அல்லது மாகாண சபையினால் செலுத்தப்படவே வேண்டிய சந்தாப்பணத்திற்கு சமனான தொகையினை அரசாங்க சேவை சகாய நிதிக்கு அதிகார சபையினால் அதன் நிதியிலிருந்து அவருக்காக செலுத்துதல் வேண்டும்.

அதிகார சபைக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுதல்..

(5) அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில்,

(அ) அவர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் இருந்து விலகியவராக கருதப்படுதல் வேண்டும் ;

ஓய்வூதியத்திற்கு உரித்தான ஊழியர்கள்.

(ஆ) அதிகார சபைக்கு அரசாங்க சேவையை அல்லது மாகாண சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவர் சேரத்துக் கொள்ளப்படும் .

சந்தர்ப்பத்தில் அவர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அவரது நிரந்தர பதவியில் நிரந்தரமான ஓய்வூதியத்திற்கான பதவியாக பிரகடனப்படுத்தப்பட்ட பதவியானவராக இருப்பின், அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு நியமனம் செய்யப்பட்ட நாள் தொடக்கம் அவர் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஓய்வுபெற்றவர் எனக் கருதி இவருக்கு ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் வழங்கப்படவேண்டிய பணிக் கொடையினை பெறக் தகைமையுள்ளவர் என்பது கருதப்படுதல் வேண்டும் ;

(இ) அவர் வயது காரணமாக அல்லது சௌக்கிய ஏதுவினால் ஓய்வு பெற்றமையால், அல்லது அதிகார சபையில் இருந்த பதவியானது இல்லாமலாக்கப்பட்டதால் அல்லது வேறு எந்த காரணத்தினால் சேவை முடிவுறுத்தப்பட்டால் அல்லது ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் வழங்கப்படக் கூடியதான ஓய்வூதியக் பனிக் கொடையானது அவருக்கு வழங்கப்படலாகாது ;

(ஈ) அதிகாரசபையில் சேவையிலிருக்கும் போது அவருக்கு மரணம் சம்பவித்தால் அல்லது அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக அவரது மரணம் இடம் பெறின், ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின்படி அவருக்கு கொடுக்க கூடியதான பனிக்கொடை எதும், அதிகார சபையின் சேவைக்காகவென கொடுக்க பாலதான கொடையேதும் அவருக்காக கொடுபடுதல் வேண்டும் ;

அதிகார சபையில் சேவையிலிருக்கும் போது இறப்பெய் தல்.

(உ) அதிகார சபையின் ஊழியர் கோப்பிற்கு அவர் நிரந்தரமானவராக நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அரசாங்க சேவை சகாய நிதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்க சேவை சகாய நிதி அங்கவத்தவராக இருப்பின், அவர் சேவையிலிருந்து நீக்கப்படாமல், அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் விருப்பத்தின் பிரசாரம், ஒப்பந்தம் முடிவடைந்ததனால் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் கைவிடப்பட்டவராக அச்சட்டத்தின் கருமங்களுக்காக கருதப்படுதல் வேண்டும்

அ. சே. ச. நி. பேரி லிருக்கும் ஊழி யர்கள்.

(6) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்காக அரசாங்கத்திற்கு அல்லது மாகாண சபைக்கு சேவைப் புரிய ஒத்துக்கொண்ட அரசாங்கத்துடன் அல்லது மாகாண சபையுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டுள்ளஆளொருவர் அதிகார சபையில் சேவையிலிருக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வாளினால் அதிகாரசபையில் சேவைப் புரியும் காலப்பகுதியானது, அவ்வொப்பந்தத்தின்படி ஒப்பந்தத்தை நிறைவேற்றும் சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

கட்டாய சேவை.

23. அதிகாரசபையின் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் குற்றிவியல் நீதிக் கோவையின் கருத்துக்கோடல்களுக்கமையவும், அதன் கருமங்களுக்காகவும் அரசாங்க சேவைக்களாக கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் ஊழியர்கள் அர சாங்க சேவகர் களாக கருதப்படு தல்.

24. அதிகாரசபையின் இவ்வூழல் சட்டத்தின் ''ஊழியர'' அதன் கருமங்களுக்காக உப அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் விதிகளுக்கமைய கருத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

இலஞ்சவூழல் சட்டத்தின் நோக் கங்களுக்கமைய அதிகார சபை யானது அட்ட வணைப்படுத்தப் பட்ட நிறுவன மாகும்.

25. (அ) அதிகாரசபையினால் 23 ஆம் சரத்தின் பிரகாரம் ஊழியர் கோப்பினை சேர்த்துக்கொள்ளும் வரை, பயணிகள் போக்குவரத்து விடயத்திற்குரித்தான மாகாண அமைச்சிற்கு நியமிக்கப்பட்டுள்ள மாகாண போக்குவரத்து பணிப்பாளர் அதிகார சபையின் பொது முகாமையாளராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) 7 ஆம் உப சரத்தின்படி நிர்வாக அதிகாரம் பொறுப்பளிக்கப்படுகின்ற பொது முகாமையாளர் அதிகார சபையின் தலைமை நிர்வாக உத்தியோகத்தவராதல் வேண்டும்.

பொதுமுகாமை யாளர் அதிகார சபையின் தலைமை நிர்வாக உத்தியோகத்தரா வார்.

26. அதிகார சபையின் பொதுவான கொள்கைகள் ரீதியான பணிப்புகளுக்கமைய, அதிகார சபையின் அன்றாட நடவடிக்கைகளை நடாத்தலும், அதிகார சபையின் ஊழியர்கள் சம்பந்தமான பொதுவான ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் உட்பட்ட நிர்வாக நடவடிக்கைகளும், அதிகாரசபையின் நிதி நிர்வாக பற்றிய பொதுவான மேற்பார்வையையும் சம்பந்தமாக பொறுப்புக்கள் பொது முகாமையாளருக்கு பொறுப்பளிக்கப்படும்.

பொது முகாமை யாளரினது பொறுப்புக்கள்.

பொது முகாமையாளருக்கு பொறுப்பளிக்கப்படல்.

27. விதிமுறைகளை இயற்றும் அதிகாரங்கள் தவிர, இந்நியதிச் சட்டத்தினால் அதிகாரசபைக்கு அதிகாரங்களை வழங்கும் ஏதேனும், அதிகாரங்கள், கருமங்கள் இடையே திறன்மிக்க நிர்வாகத்திற்குத் தேவைப்படுவதானதாக அதிகாரசபை கருதுகின்ற அதிகாரங்கள் ஏதும், கருமங்களும் அதிகார சபையினால் பொது முகாமையாளருக்கும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பொறுப்பளிக்கப்படலாம் அவ்வாறான அதிகாரங்களையும், கருமங்களையும் அதிகார சபையின் வழிக்காட்டல்களுடனும், கண்காணிப்பின் கீழும் செயல்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறான வழிகாட்டல்களும், கண்காணிப்பும் அதிகார சபைக்காக அதின் தலைவர் அல்லது 7 (ஆ) ஆம் சரத்து போன்ற உப சரத்துக்களின் கீழ் அதிகாரமளிக்கப்படக்கூடிய ஏனைய உத்தியோகத்தர்களாலும் வழங்கப்படலாம்.

பொது முகாமையாளரினால் பொறுப்பளிக்கப்படுதல்.

28. பொது முகாமையாளரின் அதிகாரங்கள், கருமங்களில் அவர் தேவையெனக் கருதும்வாறு, ஏதேனும் அதிகாரங்களை, கருமங்களை தலைவரின் ஒப்புதலுடன் அதிகாரசபையின் முகாமையாளருக்கும், வேறு பொருத்தமான பதவியினை வதியவருக்கு எழுத்தில் பொறுப்பளிக்க இயலும் என்பதுடன், உதவி பொது முகாமையாளரும் அல்லது அவ்வாறான தொழில் பெறுநர் ஒருவரால் அவ்வாறான அதிகாரங்களை செயற்படுத்தவும், கருமங்களை மேற்கொள்வதும் பொது முகாமையாளரின் கண்காணிப்பிலும், பணிப்பிலும் நடைபெறுதல் வேண்டும்.

அதிகார சபைக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்துவதும், பலபிரயோகம் செய்தலும்.

29. (அ) இந்நியதிச் சட்டம் அல்லது நியதிச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட உப யாப்பின் அல்லது விதியின் அல்லது கட்டளையொன்றின் விதிமுறைகளுக்கமைய அல்லது ஏதேனும் விதிமுறைகள் பிரகாரம் தமக்கு அளிக்கப்பட்ட அல்லது பொறுப்பளிக்கப்பட்ட நடவடிக்கையெதனையும் மேற்கொள்ளும் போது அல்லது அதிகாரமெதனையும் நடைமுறைப்படுத்தும் போது இவ்வதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கும் அல்லது ஊழியருக்கு வேண்டும் என்ற இடைஞ்சல்களை நிகழ்த்துவரொருவரும் குற்றமொன்றை இழைத்தமைக்காக குற்றவாளியாவதுடன் நீதிவான் ஒருவர் முன் நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படின் 2,000 ரூபாவிற்கு மேற்படாத சிறை தண்டனைக்குற்றப்படுதல் அல்லது இரண்டு விதிகளில் ஒரு முறையான தண்டனைக்குட்படுதல் வேண்டும் ;

(ஆ) இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது நியதிச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட உப யாப்பொன்று, விதியொன்றினை அல்லது கட்டளையினை மீறுவது குற்றமாகப்படுவதுடன், பிரதேச நீதிமன்ற அதிகாரம் கொண்ட நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்னர் அவர் குற்றவாளியாக காணப்படின் 2,000 ரூபாவிற்கு மேற்படாத தண்டப் பணம் செலுத்தவோ அல்லது 12 மாதங்களுக்கு மேற்படாத சிறை தண்டனைக்குட்படவோ அல்லது இருமுறைகளில் ஒருமுறையான தண்டனைக்குட்படுதல் வேண்டும் ;

(இ) மேலுள்ள, இச்சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் எதுவும், தொடர்ச்சியாக செய்யப்படுகின்ற குற்றமொன்றாகின்ற குற்றவாளியாக காணப்பட்டதன் பின்னர், அக்குற்றமளிக்கின்ற ஒவ்வொரு தினத்திற்கும் 500 ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணம் விதிக்கப்படலாம் ;

(ஈ) இச்சரத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படுகின்ற நபரொருவருக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைக்குட்படுவதற்கு மேலதிகமாக, கட்டளையொன்றை பணிப்பொன்றையும் விடுக்கலாம். அக்கட்டளையின்படி அந் நபர் செயற்படாவிடின் நீதிமன்றத்தின் பிஸ்கல் உத்தியோகத்தர்களால் அதனைச் செயற்படுத்த கட்டளை பிறப்பிக்க முடியும் ;

(உ) இச்சரத்தின் பிரகாரம் மஜிஸ்திரேட் நீதிமன்றத்திடம் அதிகாரசபையின் தலைவர் அல்லது அவரின் எழுத்துமூலமான அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் முறைப்பாட்டை சமர்ப்பித்தல் இயலும்.

## மூன்றாம் பாகம் நிதி

அதிகார சபையின் நிதியத்திற்கான வரவுகள்.

30. அதிகாரசபைக்கு அதற்கேயுரியதான நிதியமொன்றிருத்தல் வேண்டும்.

31. கீழ் குறிப்படப்படுகின்ற நிதிகள் அதிகாரசபையின் நிதியத்திற்கு வழங்கப்படலாம்.

(1) அதிகாரசபையினால் தனது அதிகாரங்களை செயற்படுத்துதல், நடவடிக்கைகளையும், கருமங்களையும் நிறைவேற்றுதல் மூலம் கிடைக்கப்பெறுகின்ற, சேகரிக்கப்படுகின்ற அல்லது அறவிடப்படுகின்றதான அனைத்து நிதிகளும்.

(2) ஊவா மாகாண மாகாண சபையினால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படுகின்ற அனைத்து நிதிகளும்.

(3) எந்தவொரு நிதி ஓடகம் மூலம் கட்டணம், உதவிப் பணம், நன்கொடை, கடன் என அதிகார சபைக்கு கிடைக்கப்பெறுகின்ற அனைத்து நிதிகளும்.

32. அதிகாரசபையின் நிதியத்திற்கான வரவுகள், அதிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவுகள் சம்பந்தமான பொதுவான கண்காணிப்பு பற்றிய பொறுப்பு பொது முகாமையாளருக்கு அளிக்கப்படும். வரவுகள், கொடுப்பனவுகள் பற்றிய பொதுவான கண்காணிப்பு.

33. அதிகார சபையின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்காகவென மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களுக்காகவும், அதிகார சபை அலுவல்கள் தொழில் புரிவோருக்கும் வேதனங்கள், படிகள் மற்றும் ஏனைய அனைத்து வகையாக கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்காக இந்நியதிச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்துமூல சட்டத்தின்படி அதிகார சபையின் அதிகாரங்களை செயற்படுத்துவதற்கும் கருமங்களை நிறைவேற்றுவதற்கும் பயணிகள் போக்குவரத்து சேவையினை ஒழுங்குபடுத்தவும், நடாத்திக் கொண்டு செல்வது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்காகவும், பஸ் தரிப்பு நிலையங்களையும் பயணிகளுக்காக தங்குமிடங்களையும் நிர்மாணித்தல் அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், அத்துடன் இவை தொடர்பான கருமங்களுக்காவும் அமைச்சர்கள் சபையினால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படுகின்ற வேறு நோக்கங்களுக்காகவும் அதிகார சபைக்கு அதிகாரசபை நிதியத்தினை பிரயோகப்படுத்திக் கொள்ள இயலுமானதாயிருத்தல் வேண்டும். அதிகாரசபையினால், நிதியத்தினைப் பயன்படுத்திக் கொள்ளல்.

34. அதிகாரசபையின் நிச்சயப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காகவென அமைச்சர்கள் சபையின் முன் அங்கீகாரத்துடன் கடனாக நிதியினைப் பெற்றுக்கொள்ள அதிகாரசபைக்கு அதிகாரமுள்ளதுடன், கடனினளவு, மீள செலுத்தும் கால அளவு, கடன் கட்டுப்பாடு ஆகிய நிபந்தனைகளும், கடனைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நிறுவனம் என்பன மாகாண அமைச்சர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டவராயிருத்தல் வேண்டும். அதிகாரசபையினால், கடன்பெறுதல்.

35. அதிகாரசபையின் நிதி வருடமானது பஞ்சாங்க வருடமாக இருத்தல் வேண்டும். நிதி வருடம்.

36. அதிகாரசபையின் வருமானங்களும், வரவுகள், செலவுகள், சொத்துக்கள் அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்களும் அவை தொடர்பான கணக்கீட்டு நடைமுறைகள் தொடர்பாக ஊவா மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் அவ்வப்போது கணக்காய்வு மேற்கொள்ளப்படலாம். அதிகாரசபையின் கணக்காய்வுகள்.

37. இந்நியதிச் சட்டத்தின் 26 ஆம் சரத்தின் பிரகாரம் நியமிக்கப்படுகின்ற அதிகாரசபையின் பொது முகாமையாளர், எதிர்காலத்தில் வேறு தீர்மானமொன்று எடுக்கப்படும் வரையில் இந்நியதிச் சட்டத்தின் குறிக்கோள்களை முன்னிட்டு ஊவா மாகாணத்தில் "மாகாண போக்குவரத்து பணிப்பாளர்" ஆவார். பொது முகாமையாளரும் மாகாண போக்குவரத்து பணிப்பாளரும்.

38. அதிகாரசபையானது, நடைமுறைப்படுத்தும் நாளன்று, ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து விடத்திற்குப் பொறுப்பான அமைச்சின் போக்குவரத்து பிரிவில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், ஊழியர்களும், அந் நாள் முதல் அவர்களின் ஒருபாட்டுடன் அதிகார சபையின் உத்தியோகத்தர்களாகவும், ஊழியர்களாகவும் கருதப்படல் இயலும் அவர்கள் மாகாண அரச சேவையிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்படுவதன் பேரில் அதிகாரசபையின் கடமைகளுக்காக அந் நாள் தொடக்கம் இருமுகப்படுத்தப்பட்டதாக கருதப்படவேண்டுமென்பதுடன், இந்நியதிச் சட்டத்தின் 23 ஆம் சரத்தினது அவர்களுக்கு ஏற்புடையளவாதல் வேண்டும். சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டதாக கருதுதல் வேண்டும்.

39. இந்நியதிச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும், கருமங்களுக்கும் ஏற்புடையதாக இந்நியதிச் சட்டமானது நடைமுறைப்படுத்தப்பட முன்னதாக, ஊவா மாகாண பணிப்பாளரினால் செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஏதுமிருப்பின், இவ்வதிகார சபையானது நடைமுறைப்படுத்தப்படும் திகதி தொடக்கம் அவ்வனைத்து ஒப்பந்தங்களும் வலுவற்றதாக கருதப்படுதல் வேண்டும். போக்குவரத்து பணிப்பாளரினால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள்.

40. பயணிகள் போக்குவரத்து விடயத்திற்கு பொறுப்பான மாகாண அமைச்சரினால் நிர்வகிக்கப்படுகின்ற 10,166 ஆம் இலக்க கொண்ட போக்குவரத்து செயற்பாட்டு சபை கணக்கின் பற்றுகளை செலுத்தியதன் பின்னர் கணக்கின் மீதத்தினை அதிகாரசபைக்கு நிதியத்தின் பங்கொன்றாயிருத்தல் வேண்டும். போக்குவரத்து கணக்கு.

41. 1 ஊவா மாகாணத்தின் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒருபாட்டுடன் அமைச்சரினால் வேறுவிதமாக தீர்மானிக்கப்படும் வரையில் ஒருமுகப்படுத்தலின் பேரில் அதிகார சபையின் கடமைக்கு உட்படுத்தப்படும் ஊழியர் கோப்பிற்கு உரிய ஆளுக்கான வேதனங்கள், படிகள், பிற கொடுப்பனவுகள் என்பன பயணிகள் போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளில் இருந்து வழங்கப்படுதல் வேண்டும். இந்நடவடிக்கை ஊவா மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இருமுகப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வேதனமும், ஏனைய கொடுப்பனவுகளும் வழங்குதல்.

41. 2 ஊவா மாகாணத்தின் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒருபாட்டுடன் அமைச்சரினால் வேறுவிதமாக தீர்மானிக்கப்படும் வரையில் மேற்படி (1) ஆம் உபசரத்தின் குறிக்கப்பட்ட ஊழியர்களை தவிர ஏனைய ஊழியர்களுக்கு உரியதான வேதனங்கள், படிகள், பிற கொடுப்பனவுகள் என்பன மேற்குறித்த 40 ஆம் சரத்தில் குறிப்பிட்ட கணக்கின் நிதியிலிருந்து வழங்கப்படுதல் வேண்டும் இந் நடவடிக்கை ஊவா மாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள்.

42. ஊவா மாகாண நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் ஆலோசித்து, அமைச்சர் வேறு விதமாக தீர்மானிக்கும் வரையில் 41 ஆம் சரத்தின் விதிமுறைகளுக்கமைவாக இந்நியதிச் சட்டத்தின் எந்தவொரு நோக்கத்திற்காகவுமென அதிகாரசபையினால் குறிப்பிடப்பட்ட கணக்கின் நிதியை பிரயோகப்படுத்தல் இயலும்.

43. அதிகார சபையினால் வேறுவிதமாக தீர்மானிக்கப்படும் வரை, நியதிச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் செல்லுபடியான கட்டளைகளாக கருதப்படுதல் வேண்டும்.

44. இந்நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி பதிப்புக்களுக்கிடையே தெளிவின்மைகள் ஏற்படின் அப்போது சிங்கள மொழி மூலம் உரையே மேலோங்கி நிற்க வேண்டும்.

45. கருத்துக் கோடல்கள் –

"அதிகார சபை" , "மாகாண அதிகார சபை" எனும் சொற்களினால் ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை எனும் பொருள்படும்.

"அமைச்சர்" என்பது, ஊவா மாகாண அமைச்சர்கள் சபையின் பயணிகள் போக்குவரத்து சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என பொருள் கொள்ளப்படும்.

"அமைச்சர்கள் சபை" என்பது, ஊவா மாகாண சபையின் அமைச்சர்கள் சபை எனும் பொருள் கொள்ளப்படும்.

"மாகாணம்" எனும் சொற்கள் மூலம் ஊவா மாகாண என்பது பொருள் கொள்ளப்படும்.

"உத்தரவுப்பத்திரம்" "பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம்".

"வீதி அனுமதிப்பத்திரம்" எனும் பெயர்களில், எப்பெயரினாலும் இந்நியதிச் சட்டத்தின் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தின் கீழ் பல்வேறு கட்டணங்களின் பேரில்லா உத்தரவு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயண வழி மூலம் போக்குவரத்து செய்வதற்கு பஸ் வண்டியொன்றினைப் பயன்படுத்திக் கொள்ள அதிகாரத்தினை வழங்கி, வழங்கப்பட்ட பயணிகள் சேவை உத்தரவுபத்திரம் எனப் பொருள்படும்." பஸ் தரிப்பு நிலையம்" எனும் வாக்கியத்தினை பொருளினுள் பெரு வீதிகளின் இருப்பக்கங்களிலும் பஸ் தரிப்பதற்கான ஸ்தானபனங்களும் உட்படுதல் வேண்டும்.

"வர்த்தமானி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி எனவும், "உள்ளூராட்சி நிறுவனம்" என்பது, மாநகர சபை, நகர சபையொன்று, பிரதேச சபையொன்று என பொருள்படும்.

8- 122/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.